Registered as a Newspaper

# உதயன்

சுடர் : 40
கதிர் : 282

வெள்ளிக்கிழமை
05 செப்ரெம்பர் 2025

ஆவணி 20 ஆம் நாள்
வள்ளுவர் ஆண்டு 2056

பக்கங்கள் – 12
விலை – ரூபா 50

## சி.ஐ.டி.யின் வசமாகிறது மஹிந்தவின் மாளிகை!

கொழும்பு, செப். 5
முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்சவுக்கு வழங்கப்பட்டுள்ள கொழும்பு, விஜேராமமாவத்தையிலுள்ள அரசமாளிகையை, 11

செம்மணிப் புதைகுழிக்குள்

## 4 என்புத்தொகுதிகள் நேற்றும் அடையாளம்

யாழ்ப்பாணம், செப். 5
அரியாலை - செம்மணிப் புதைகுழியில் இருந்து, நேற்று மேலும் 4 என்புத் தொகுதிகள் அடையாளம் காணப்பட்டுள்ளன. அரியாலை - செம்மணிப் 11

## ஒரே இடத்தில் குவியலாக 8 என்புத்தொகுதிகள்!

மேலும் சில சான்றுப்பொருள்களும் மீட்பு




யாழ்ப்பாணம், செப். 5
அரியாலை செம்மணி மனிதப் புதைகுழியில் ஓர் இடத்தில் குவியலாக எட்டு என்புத்தொகுதிகள் அடையாளம் காணப்பட்டுள்ளன என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

குறிக்கப்பட்ட ஓர் இடத்தில், சில அடிகளைக் கொண்ட சுற்றளவில் எட்டு என்புத்தொகுதிகள் அடையாளம் காணப்பட்டுள்ளமை, இந்தப் புதைகுழியில் இருந்து மேலும் பல 11



பல்லாயிரம் அடியவர்கள் புடைசூழ

## தெல். துர்க்காதேவியின் தேர்த்திருவிழா பக்திபூர்வம்

யாழ்ப்பாணம், செப். 5
வரலாற்றுப் பிரசித்திபெற்ற தெல்லிப்பழை துர்க்கா தேவி ஆலய மஹோற்சவப் பெருவிழாவின் தேர்த் திருவிழா நேற்று வியாழக்கிழமை பல்லாயிரக்கணக்கான அடியவர்கள் புடைசூழ மிகவும் பக்திபூர்வமாக 11

மண்டைதீவில் சர்ச்சைக்குரிய

# புதைகுழிக் கிணறுகளை உடனடியாக அகழுங்கள்

ஊர்காவற்றுறை பொலிஸில் முறைப்பாடு

**யாழ்ப்பாணம், செப்ரெம்பர் 5**
**தீவகப் படுகொலைகளுடன் தொடர்புடைய சடலங்கள் புதைக்கப்பட்ட மண்டைதீவுக் கிணறுகளை அகழ்ந்து, நீதியான விசாரணை முன்னெடுக்கப்பட வேண்டும் என்று ஊர்காவற்றுறை பொலிஸாரிடம் முறைப்பாடு வழங்கப்பட்டது.** 11

யாழ். இளைஞர்களின் தயாரிப்பான

## 'அம்பர்' சுற்றுலாப்படகு நேற்றுமுதல் சேவையில்



யாழ்ப்பாணம், செப். 5
யாழ்ப்பாண இளைஞர்களைப் பயன்படுத்தி, யாழ்ப்பாணத்தில் தயாரிக்கப்பட்ட 'அம்பர்' எனப் பெயரிடப்பட்ட சொகுசு 11

விசாரணைகளைத் துரிதப்படுத்த

## ஓ.எம்.பி. அலுவலகத்துக்கு 25 உபகுழுக்கள் நியமனம்

அமைச்சரவை அனுமதி

விரிவு பக்கம்:- 11

புலமைப்பரிசில் பரீட்சை

## தமிழ்ப் பரீட்சார்த்திகளில் யாழ்.மாணவன் முதலிடம்



யாழ்ப்பாணம், செப். 5
2025ஆம் ஆண்டுக்கான ஐந்தாம் தர புலமைப்பரிசில் பரீட்சைப் பெறுபேறுகளில், தமிழ்மொழி மூலமான பரீட்சார்த்திகளில் யாழ். இந்து ஆரம்பப் பாடசாலை மாணவன் ஆனந்த சோதி லக்சயன் 194 மதிப்பெண்களைப் பெற்று நாடளாவிய ரீதியில் முதலிடம் பிடித்துள்ளார். 11

## விளம்பரப்பலகை அனுமதியில் மோசடிகள் என்று குற்றச்சாட்டு

இலஞ்ச ஊழல் ஆணைக்குழுவில் முறைப்பாடு வழங்கவும் முடிவு

யாழ்ப்பாணம், செப். 5
யாழ்ப்பாணம் பருத்தித்துறை வீதியில் பிரதான வீதிக்கு குறுக்காக அமைக்கப்பட்ட மேம்பால விளம்பரப் பதாகை விடயத்தில் ஊழல் மோசடிகள் உள்ளன என்று குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டுள்ளது. இதையடுத்து, இந்த விடயம் தொடர்பில் இலஞ்ச ஊழல் ஆணைக்குழுவில் முறைப்பாடு வழங்க சபை தீர்மானித்துள்ளது.
யாழ்ப்பாணம் மாநகர சபையின் மாதாந்த அமர்வு 11

முச்சந்தி முரளி

'அப்ப செம்மணிக்கு அடுத்ததா மண்டைதீவிலையும் இனி மண்டையோடுகள் வரப்போகுதோ?'

## சபையைத் தொடர்ந்து குழப்பினால் பொலிஸாரிடம் உதவி கோருவேன்!

யாழ்.மாநகர உறுப்பினர்களுக்கு முதல்வர் மதிவதனி எச்சரிக்கை

யாழ்ப்பாணம், செப். 5
சபையைத் தொடர்ந்து நடத்தவிடாமல் குழப்பங்களை ஏற்படுத்தினால், பொலிஸாரின் உதவியைப் பெற்று சபையை நடத்தவேண்டி ஏற்படும் என்று யாழ்ப்பாணம் மாநகர முதல்வர் மதிவதனி 11

யாழ். மாநகர எல்லைக்குள்

## அனுமதி பெறாத பல கோபுரங்கள்!

யாழ்ப்பாணம், செப். 5
யாழ்ப்பாணம் மாநகர எல்லைக்குள் நிறுவப்பட்ட 35 தொலைத்தொடர்புக் கோபுரங்களில், பல தொலைத்தொடர்புக் 11



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| கொவிசெத | |
|---|---|
| திகதி | 04.09.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 4184 |
| ஆங்கில எழுத்து | W |
| வெற்றி இலக்கங்கள் | 02 04 12 47 |
| விசேட எழுத்து | W |

| ஹந்தஹண ராசி சுப பலன் | |
|---|---|
| திகதி | 04.09.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 1251 |
| வெற்றி இலக்கினம் | விருச்சிகம் |
| வெற்றி இலக்கங்கள் | 01 28 29 48 |

| NLB ஜய | |
|---|---|
| திகதி | 04.09.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 0210 |
| ஆங்கில எழுத்து | M |
| வெற்றி இலக்கங்கள் | 3 0 3 1 |

| மெகா பவர் | |
|---|---|
| திகதி | 04.09.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 2290 |
| ஆங்கில எழுத்து | B |
| சுப்பர் இலக்கம் | 02 |
| வெற்றி இலக்கங்கள் | 30 36 37 41 |

| மஹஜன சம்பத | |
|---|---|
| திகதி | 04.09.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 5942 |
| ஆங்கில எழுத்து | S |
| வெற்றி இலக்கங்கள் | 3 8 1 7 8 6 |

| தன நிதானய | |
|---|---|
| திகதி | 04.09.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 1972 |
| ஆங்கில எழுத்து | S |
| வெற்றி இலக்கங்கள் | 03 14 15 63 |
| விசேட எழுத்து | S |

| அத சம்பத | |
|---|---|
| திகதி | 04.09.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 0517 |
| ஆங்கில எழுத்து | S |
| வெற்றி இலக்கங்கள் | 1 7 8 6 |

| சுப தவசக் | |
|---|---|
| திகதி | 04.09.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 0058 |
| வெற்றி இலக்கினம் | கன்னி |
| வெற்றி இலக்கங்கள் | 14 31 39 43 |

# செம்மணிப் புதைகுழிக்கு நீதி; காலதாமதம் வேண்டாம்

## சட்டத்தரணி ரனித்தா தெரிவிப்பு

**யாழ்ப்பாணம்,செப்.5**

**செம்மணிப் புதைகுழி விவகாரத்தில் காலதாமதமின்றி நீதி கிடைக்க வழி வகுக்கவேண்டும். இதற்குச் சர்வதேச ரீதியான பொறிமுறைக்குள் செல்வதற்கான நடவடிக்கையை தமிழ் மக்கள் ஒன்றிணைந்து முன்னெடுக்கவேண்டும் என்று செம்மணி மனிதப்புதைகுழி விவகாரத்தில் பாதிக்கப்பட்டவர்களின் சார்பாக முன்னிலையாகிவரும் சட்டத்தரணி ரனித்தா ஞானராஜா தெரிவித்தார்.**

கடந்த செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற கிருஷாந்தி கொலை வழக்கு விசாரணைத் தொகுப்பு நூலான வன்மம் நூல் அறிமுக நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றுகையில் அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், கடந்த 25 வருடங்களுக்கு முன்னர் தோண்டி எடுக்கப்பட்ட 15 எலும்புக்கூட்டுத் தொகுதிகளின் கதையைத் தேடுவதற்கு தற்போதுதான் ஆரம்பித்துள்ளோம். நீதியைத் தேடுதல் இடைவெளியைவிட்டு அல்லது காலத்தைக் கடத்திக் கேட்பதாக இருப்பதாக அமையக்கூடாது.

கடந்த கால வடுக்களை அடுத்த சந்ததிக்கு உரியவகையில், உரிய நேரத்தில் கடத்தவேண்டும். தற்போதைய அரசாங்கமும் கடந்த காலங்களில் ஆட்சிகளிலிருந்த அரசாங்கங்களைப் போலவே 4 வருடங்களைக் கடத்திவிட்டுப் போவார்கள் என்பதில் எவ்வித ஐயமுமில்லை.

எங்கள் வலிகளும், சுமைகளும் சித்துபாத்தி மனிதப்புதைகுழி விவகாரம், கிரிஷாந்தி வழக்கு ஆகியவற்றுடன் மாத்திரம் நிற்காமல், தமிழரின் விவகாரம் ஒட்டுமொத்தமாக சர்வதேச ரீதியான பொறிமுறைக்குள் செல்வதற்கான நடவடிக்கையைத் தமிழ் மக்கள் ஒன்றிணைந்து முன்னெடுக்க வேண்டும்- என்றார். (ச-66)

| சுபிரி தன சம்பத | |
|---|---|
| திகதி | 04.09.2025 |
| தினம் | வியாழக்கிழமை |
| வெற்றி வாரம் | 0650 |
| ஆங்கில எழுத்து | M |
| வெற்றி இலக்கம் | 9 8 7 9 3 0 |

| Super Ball | |
|---|---|
| திகதி | 04.09.2025 |
| தினம் | வியாழக்கிழமை |
| சீட்டிழுப்பு வாரம் | 2916 |
| ஆங்கில எழுத்து | V |
| வெற்றி இலக்கம் | 26 31 38 78 |

| சனிதா | |
|---|---|
| திகதி | 04.09.2025 |
| தினம் | வியாழக்கிழமை |
| ஆங்கில எழுத்து | A |
| வெற்றி இலக்கம் | 39 42 63 71 |
| வெற்றி வாரம் | 5077 |

| SASIRI | |
|---|---|
| திகதி | 04.09.2025 |
| தினம் | வியாழக்கிழமை |
| வெற்றி வாரம் | 0762 |
| வெற்றி இலக்கம் | 09 13 40 |

| லக்ன ராசி | |
|---|---|
| திகதி | 04.09.2025 |
| தினம் | வியாழக்கிழமை |
| கன்னி | |
| வெற்றி இலக்கம் | 01 17 39 50 |
| சீட்டிழுப்பு வாரம் | 4628 |

| KAPRUKA | |
|---|---|
| திகதி | 04.09.2025 |
| தினம் | வியாழக்கிழமை |
| ஆங்கில எழுத்து | J |
| சுப்பர் இலக்கம் | 40 |
| வெற்றி இலக்கம் | 05 12 15 58 |
| வெற்றி வாரம் | 2092 |

| அத கோடிபதி | |
|---|---|
| திகதி | 04.09.2025 |
| தினம் | வியாழக்கிழமை |
| ஆங்கில எழுத்து | F |
| வெற்றி இலக்கம் | 05 17 39 41 |
| வெற்றி வாரம் | 2742 |

# யாழ். மாநகரசபை மேயரை தவறாக வழிநடத்துகின்றனர்

## உறுப்பினர் யோகேஸ்வரி குற்றச்சாட்டு

யாழ்ப்பாணம், செப்.5

யாழ்ப்பாணம் மாநகரசபை முதல்வரை யாரோ தவறாக வழிநடத்துகின்றனர் என்று யாழ்ப்பாணம் மாநகரசபையின் ஈ.பி.டி.பி. கட்சி உறுப்பினர் ப.யோகேஸ்வரி குற்றஞ்சாட்டினார்.

யாழ்ப்பாணம் மாநகரசபை அமர்வு நேற்று நடைபெற்றது. அதிலேயே உறுப்பினர் ப.யோகேஸ்வரி இந்தக் குற்றச்சாட்டை முன்வைத்தார்.

முன்னைய அமர்வு ஒத்திவைக்கப்பட்டு அதன் தொடர்ச்சியே இன்று (நேற்று) நடைபெறுகின்றது. ஆனால் இது மாதாந்த அமர்வு என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்று உறுப்பினர் ப.யோகேஸ்வரி சுட்டிக்காட்டினார். அதற்குப் பதிலளித்த யாழ்ப்பாணம் மாநகரசபை முதல்வர், அதில் தவறு இடம்பெற்றிருக்கலாம், தவறு திருத்தப்படும் என்று பதிலளித்தார்.

ஒத்திவைக்கப்பட்ட அமர்வா? அல்லது மாதாந்த அமர்வா? என்பதில் குழப்பம் ஏற்பட்டதை அடுத்து, இந்த அமர்வை எவ்வாறு எடுத்துக்கொள்ளலாம் என்று சபை உறுப்பினர்களிடம் கருத்துக்கேட்கப்பட்டபோது, மாதாந்த அமர்வாக எடுத்துக் கொள்ளலாம் என்று அவர்கள் தீர்மானித்தனர். (எ-26)



# முதியவரை இனங்காண உதவுமாறு கோரிக்கை!

யாழ்ப்பாணம், செப்.5

கைதடி அரச முதியோர் இல்லத்தில் சேர்க்கப்பட்டுள்ள முதியவர் ஒருவரை அடையாளம் காண்பதற்கு உதவி கோரப்பட்டுள்ளது.

கைதடி அரச முதியோர் இல்லத்தில் கடந்த 2ஆம் திகதி சுமார் 70 வயது மதிக்கத்தக்க முதியவர் ஒருவர் சேர்க்கப்பட்டுள்ளார். வலி.வடக்கு பிரதேச செயலாளர் ஊடாக தெல்லிப்பழை ஆதார மருத்துவமனையின் அம்புலன்ஸ் மூலம் கொண்டுவரப்பட்டு அவர் முதியோர் இல்லத்தில் சேர்க்கப்பட்டுள்ளார்.

முதியவர் தன்னைப்பற்றிய தகவல்களைத் தெரிவிக்க முடியாத நிலையில் உள்ளதால், அவர் தொடர்பான தகவல்கள் தெரிந்தவர்கள், கைதடி அரச முதியோர் இல்லத்தைத் தொடர்புகொள்ளுமாறு கோரப்பட்டுள்ளனர். (எ-இ)

# பதின்ம வயதுக் கர்ப்பம் 7 மாதங்களில் 44


கொழும்பு,செப்.5

2025 ஆம் ஆண்டின் முதல் ஏழு மாதங்களில் பதின்ம வயதுக் கர்ப்பம் தொடர்பான சம்பவங்கள் 44 பதிவாகியுள்ளதாகத் தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை தெரிவித்துள்ளது.

இந்தக் காலப்பகுதியில், தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபைக்கு 5 ஆயிரத்து 461 சிறுவர்கள் தொடர்பான முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளன.

குறித்த காலப்பகுதியில், சிறுவர்கள் மீதான கடுமையான பாலியல் துஷ்பிரயோகம் தொடர்பாக 141 முறைப்பாடுகளும், பாலியல் துன்புறுத்தல் தொடர்பாக 330 முறைப்பாடுகளும் பாலியல் வன்கொடுமை தொடர்பாக 32 முறைப்பாடுகளும் கிடைக்கப்பெற்றுள்ளன. அதிகபட்சமாக சிறுவர்கள்மீதான சித்திரவதை தொடர்பாக ஆயிரத்து 126 முறைப்பாடுகள் பதிவாகியுள்ளன.

மேலும், சிறுவர்கள் யாசகம் பெறுவது தொடர்பாக 125 முறைப்பாடுகளும் சிறுவர்களைத் தொழிலுக்கு அமர்த்துதல் தொடர்பாக 82 முறைப்பாடுகளும் பதிவாகியுள்ளன. இதே காலப்பகுதியில், சிறுவர்களுக்கு எதிரான இணைய மிரட்டல் தொடர்பாக 81 முறைப்பாடுகளும், போதைப்பொருள் குற்றங்கள் தொடர்பாக 63 முறைப்பாடுகளும், குழந்தைத் திருமணம் தொடர்பாக 3 முறைப்பாடுகளும் கருக்கலைப்புத் தொடர்பாக ஒரு முறைப்பாடும் பதிவாகியுள்ளதாகத் தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை தெரிவித்துள்ளது. (ச-இ)



# சிறுமி துஷ்பிரயோகம்; கான்ஸ்டபிள் கைது!

கொழும்பு,செப்.5

புத்தல பொலிஸ் பிரிவின் எகொடவத்த ஒக்கம்பிட்டியவில் 9 வயதுடைய சிறுமியைப் பாலியல் வன்கொடுமை செய்த குற்றச்சாட்டியில் பொலிஸ் கான்ஸ்டபிள் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

கைதுசெய்யப்பட்ட நபர் மட்டக்களப்புத் தலைமையகப் பொலிஸில் பணியாற்றுகிறார்.

புத்தலப் பேருந்து நிலைய மகளிர் பொலிஸ் பிரிவு அதிகாரிகள் குழுவால் சந்தேகநபர் கைதுசெய்யப்பட்டார். (ச-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# ஆண்டுதோறும் 200 சிறுவர்கள் புற்றுநோயால் சாவு!

**கொழும்பு, செப்.5**


**நாட்டில் ஆண்டுதோறும் 200 சிறுவர்கள் புற்றுநோயால் உயிரிழக்கின்றனர் எனத் தேசிய புற்றுநோய் கட்டுப்பாட்டுத் திட்டத்தின் சமூக விசேட மருத்துவ நிபுணர் சுராஜ் பெரேரா தெரிவித்துள்ளார்.**

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:
2022 ஆம் ஆண்டில், அடையாளம் காணப்பட்ட புற்றுநோய் நோயாளிகளில், 904 பேர் சிறுவர்களாவர்.
கடந்த 15 ஆண்டுகளுக்கான தரவுகளைப் பார்க்கும்போது சிறுவர் பருவப் புற்றுநோய் நோயாளிகளின் எண்ணிக்கை அதிகரித்துக் காணப்படவில்லை. இந்த எண்ணிக்கை பொதுவாக 600 முதல் 800 வரம்பிற்குள் இருந்தது. தற்போது, ஆண்டுதோறும் சுமார் 900 சிறுவர் பருவப் புற்று நோயாளர்கள் பதிவாகின்றனர்.
2019 ஆம் ஆண்டில் சுமார் 200 சிறுவர்கள் புற்றுநோயால் உயிரிழந்துள்ளனர். ஒவ்வொரு ஆண்டும் சராசரியாக சுமார் 200 சிறுவர்கள் புற்றுநோயால் உயிரிழக்கின்றனர்.
இவர்களில் குணமடையும் திறன் இருந்தபோதிலும் தாமதமாகக் கண்டறியப்பட்ட நோயாளிகளும் உள்ளனர். சரியான நேரத்தில் மருத்துவ சிகிச்சையை நாடினால் இந்த உயிரிழப்புகளை மேலும் குறைக்கலாம் - என்றார். (ச-இ)

## சிறுமி துஷ்பிரயோகம்
# 14 வருடங்களின் பின் 15 வருட கடூழியச்சிறை

கொழும்பு, செப்.5
14 வயது சிறுமியை பாலியல் துஷ்பிரயோகம் செய்த குற்றச்சாட்டில் கைதுசெய்யப்பட்ட சந்தேகநபருக்கு 15 வருட கடூழியச் சிறைத்தண்டனை விதித்து குளியாப்பிட்டிய நீதவான் மனோஜ் தல்கொடபிடிய உத்தரவிட்டுள்ளார்.
அத்துடன், பாலியல் துஷ்பிரயோகத்துக்குள்ளான சிறுமிக்கு இரண்டு இலட்சம் ரூபா நஷ்டஈடு வழங்குமாறும் உத்தரவிடப்பட்டுள்ளது.
கடந்த 2011 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 21 ஆம் திகதி இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது. குற்றஞ்சாட்டப்பட்டவருக்கு எதிராக முன்வைக்கப்பட்ட சாட்சியங்கள் அனைத்தும் நிரூபிக்கப்பட்டதையடுத்து இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. (ச-இ)

# கஞ்சிபானை இம்ரானை பழிவாங்க துப்பாக்கிச்சூடு?



கொழும்பு, செப்.5
கொழும்பு, மாளிகாவத்தை, ஜும்மா மஸ்ஜிட் வீதியில் நேற்றுமுன்தினம் புதன்கிழமை இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டுச் சம்பவம் தொடர்பில் பல்வேறு தகவல்கள் கிடைத்துள்ளதாகப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.
இதுதொடர்பில் பொலிஸாரால் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளில் ரி - 56 ரகத் துப்பாக்கியைப் பயன்படுத்தி இந்தத் துப்பாக்கிச்சூடு நடத்தப்பட்டுள்ளமை தெரியவந்துள்ளது.
துப்பாக்கிச்சூட்டில் காயமடைந்தவர் பாதாள உலகக் கும்பலின் தலைவரான 'கஞ்சிபானை இம்ரான்' என்று அழைக்கப்படும் மொஹமட் இம்ரான் என்பவரின் நெருங்கிய நண்பர் எனத் தெரிவிக்கப்படுகின்றது.
கஞ்சிபானை இம்ரானை பழிவாங்கும் நோக்கத்தில் இந்தத் துப்பாக்கிச்சூடு நடத்தப்பட்டிருக்கலாம் என்றும் பொலிஸார் சந்தேகிக்கின்றனர். (ச-இ)

# களவாடப்பட்ட பொலிஸ் ஜீப்!



கொழும்பு, செப்.5
முறைப்பாட்டை விசாரிக்க திஸ்ஸமஹாராமபொலிஸ் நிலைய அதிகாரிகளின் கண்காணிப்பு ஜீப் திருடப்பட்டுள்ளது. ஜீப்பைத் தேடுவதற்கு விரிவான நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக பொலிஸ் தரப்பு தெரிவித்துள்ளது. 119 க்கு கிடைத்த முறைப்பாட்டை விசாரிக்கநான்கு பொலிஸ் அதிகாரிகள் அடங்கிய குழுவொன்று சென்றுள்ளது.
இதனையடுத்து ஜீப்பின் இயந்திரம் இயங்கிக் கொண்டிருந்தபோது, அனைத்துப் பொலிஸ் அதிகாரிகளும் முறைப்பாட்டை விசாரிக்கச்சென்றுள்ளனர். அந்த நேரத்திலேயே, குறித்த ஜீப் திருடப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. (ச-இ)

# அஞ்சல் பொதிகளில் போதைப்பொருள்!

கொழும்பு, செப்.5
கட்டுநாயக்காவின் சீதுவையில் அமைந்துள்ள தனியார் அஞ்சல் மூலம் வந்த பொதிகளிலிருந்து 312 மில்லியன் ரூபா மதிப்புள்ள போதைப்பொருள் சுங்கப் போதைப்பொருள் கட்டுப்பாட்டுப் பிரிவின் அதிகாரிகளால் கைப்பற்றப்பட்டுள்ளது.
அதிலிருந்து 23 ஆயிரத்து 642போதை மாத்திரைகள், 1.445 கிலோகிராம் கொக்கெயின், 993 கிராம் மெத்தம்பேட்டமைன் மற்றும் 98 கிராம் ஐஸ் ஆகியவை மீட்கப்பட்டுள்ளன.
இவை ஜேர்மனி, செக் குடியரசு, சாம்பியா, அமெரிக்கா, கனடா மற்றும் நெதர்லாந்து ஆகிய நாடுகளில் இருந்து கொழும்பு, பாணந்துறை, வத்தளை, ராஜகிரிய மற்றும் மொரட்டுவ ஆகிய பகுதியில் உள்ள போலி முகவரிகளுக்கு அனுப்பப்பட்டுள்ளன.
இந்த போதைப்பொருள் மேலதிக விசாரணைக்காக கட்டுநாயக்க விமான நிலையப் பொலிஸ் போதைப்பொருள் பணியக அதிகாரிகளிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. (ச-இ)

## ஆர்வந்து உயிர் குடுப்பினம்?

**பு**து விளக்குமாறு தூசு பறக்கக் கூட்டுமாம். அதைமாதிரி எங்களுக்கும் ஏதும் புதிசாக் கிடைச்சால் கொஞ்சநாள் அதைத் தூக்கிவைச்சுக் கொண்டாடிப் போட்டு அப்பிடியே குப்பைத்தொட்டிக்குள்ள போட்டிடுவம். நிறைய விசயங்களை இதுக்கு உதாரணமாச் சொல்லலாம். அதில ஒண்டுதான், ஆரியகுளம். யாழ்ப்பாணத்தில முக்கியமான அடையாளங்களில ஆரியகுளமும் ஒண்டு. நீறில்லா நெற்றிபாழ், ஆறில்லா ஊர் பாழ்-எண்டு ஔவை சொன்னமாதிரி, யாழ்ப்பாணத்தில ஆறு இல்லாததால பாழ்பட்டு போயிருக்கோணும். ஆனாலும் இஞ்ச இருக்கிற குளங்களும், கேணியளும், நிலத்தடி நீரும் தான் இப்பிடி யாழ்ப்பாணத்தை உயிரோட வைச்சிருக்குதுகள். ஆனால் அதை நாங்கள் விளங்கிக் கொள்ளாமல், அப்பிடியான குளம், குட்டையளை எப்பிடி அழிக்கலாம் எண்டுதான் பாக்கிறம்.

இப்பிடித்தான் முந்தி, லண்டனில தேம்ஸ் நதியை 1883 ஆம் ஆண்டில இருந்து கவனிக்காமல் விட்டிட்டினம். அந்த நதிமுழுக்க குப்பையும், கழிவு தண்ணியும் கலந்து அதில கால்வைச்சாலே வருத்தம் பிடிக்கும் எண்ட நிலை. ஒரு மீன்கூட அங்க இல்லை. ஒருகட்டத்தில அதை அரசாங்கம் 'செத்த நதி' எண்டும் அறிவிச்சிட்டுது. ஆனால் 1950 க்குப் பிறகு அங்கத்தைச் சனத்துக்கும், அரசாங்கத்துக்கும் ஒரு ஓர்மம் வந்து அந்த நதியில இருந்த குப்பையளை எல்லாம் கிளீன் பண்ணி, தண்ணியைச் சுத்தம் செய்து, செயற்கையா ஒட்சிசன் ஏத்திப் பாத்தினம். செத்துப்போன தேம்ஸ் நதிக்கு அதோட உயிர்வந்து, இப்ப லண்டன்ர அடையாளமா மாறிப்போட்டுது. அதைவிட முக்கியமானது தேம்ஸ் நதியை சுத்தப்படுத்தி, உயிர்கொடுத்ததோட கைவிடாமல் அதுக்குப் பிறகும் அங்க ஆரும் குப்பை போடாமலும், கழிவுதண்ணியைக் கலக்காமலும் கடும் உத்தரவை அரசாங்கம் போட்டதாலதான் இண்டைக்கும் அந்தநதி வடிவாவும், உயிரோடையும் இருக்குது.

அதேமாதிரித்தான் ஆகாயத்தாமரையால மூடுப்பட்டு, பிளாஸ்ரிக் கழிவுகளும், குப்பையளும் நிறைஞ்சு கிடந்த ஆரியகுளத்துக்கு, மாநகரமேயரா மணிவண்ணன் இருந்த காலத்தில உயிர்குடுத்தவை. குளத்தைக் கிளீன் பண்ணி, சுத்திவர கட்டுகளெல்லாம் கட்டி, அன்னம் மாதிரி படகெல்லாம் விட்டு, லைற்றெல்லாம் பூட்டி 'யாழ்ப்பாணத்தின்ர தேம்ஸ்' எண்டு சொல்லத் தக்கமாதிரி ஆரியகுளத்தை மாத்தினவை. சனமும் அதைத் திறந்தவுடன இரவுபகலா படையெடுத்து, செல்பியெடுத்து பேஸ்புக்கில போட்டவை. அப்பிடிப் போனவை தாங்கள் தண்ணி குடிச்ச போத்தில்களையும், குப்பையளையும் அதில போடவும் செய்தவை. அப்பிடியே மெல்ல மெல்ல கழுதை தேய்ஞ்சு கட்டெறும்பானமாதிரி, ஆரியகுளத்துக்கு ஆக்கள் போறதும் குறைஞ்சு, அங்கையிருந்த படகு, லைற்றெல்லாம் பழுதாகி, திரும்ப தண்ணிமுழுக்க குப்பையாகி இப்ப சேடமிழுக்கிற கட்டத்தில இருக்கு. நாங்கள் எதையும் நல்லதாச் செய்துபோட்டு, பிறகு அதைக் கவனிக்காமவிட்டால் என்ன நடக்கும் எண்டதுக்கு ஆரியகுளம் நல்ல உதாரணம். இப்பவும் ஒண்டும் கெட்டுப்போகேலை. முழுசாச் செத்த தேம்ஸ்நதிக்கே உயிர்குடுக்க முடியுமெண்டால், சேடமிழுக்கிற ஆரியகுளத்தை எழுப்பி நிப்பாட்டுறதொண்டும் பெரிய வேலை இல்லை. எல்லாம் மாநகரசபையின்ர கையிலதான் இருக்கு கண்டியளோ.

padsi@uthayan.com - பட்சி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இன்றைய (ராசிபலன்)

**மேடம்:** காரியங்களில் அனுகூலம் உண்டாகும். சிலருக்கு எதிர்பாராத பணவரவுக்கும் வாய்ப்பு உண்டு. தந்தைவழியில் எதிர்பார்த்த காரியம் அனுகூலமாக முடியும். புதிய முயற்சிகளைப் பிற்பகலுக்குமேல் தொடங்குவது சாதகமாகமுடியும்.

**இடபம்:** தந்தையின் நீண்டநாள் விருப்பத்தை நிறைவேற்றும் வாய்ப்பு ஏற்படும். அரசாங்கவகையில் எதிர்பார்த்த காரியங்கள் சற்று இழுபறிக்குப் பிறகு சாதகமாகமுடியும். சகோதரர்கள் கேட்கும் உதவியை செய்து கொடுப்பீர்கள்.

**மிதுனம்:** இன்று அவசர முடிவுகள் எடுப்பதைத் தவிர்க்கவும். எதிர்பாராத செலவுகளால் கையிருப்பு கரைவதுடன் கடன் வாங்கவும் நேரிடும். உறவினர்கள் வருகையால் மகிழ்ச்சி ஏற்பட்டாலும் சில சங்கடங்களும் ஏற்படக் கூடும்.

**கடகம்:** மனம் உற்சாகத்துடன் காணப்படும். எதிர்பாராத பணவரவுக்கு வாய்ப்பு உண்டு. சிலருக்குக் குடும்பத்தினருடன் கோயில்களை தரிசிக்கும் வாய்ப்பு ஏற்படும். மற்றவர்களுடன் வீண்மனஸ்தாபம் ஏற்படக்கூடும் என்பதால், பேச்சில் பொறுமை அவசியம்.

**சிம்மம்:** கணவன் மனைவிக்கிடையே அந்நியோன்யம் அதிகரிக்கும். வாழ்க்கைத் துணையின் தேவைகளை நிறைவேற்றுவீர்கள். அரசாங்கக் காரியங்கள் தாமதமாகமுடியும். அலுவலகப் பணிகளில் உற்சாகமாக ஈடுபடுவீர்கள்.

**கன்னி:** எதிர்பார்த்த காரியங்கள் அனுகூலமாக முடியும். உடல் ஆரோக்கியம் மேம்படும். மனதில் தன்னம்பிக்கை அதிகரிக்கும். எதிரிகளால் ஏற்பட்ட தொல்லைகள் நீங்கும். சகோதரர்களால் ஆதாயம் உண்டாகும்.

**துலாம்:** வீண்செலவுகள் ஏற்படக்கூடும். முக்கியமான முடிவுகள் எதுவும் எடுக்கவேண்டாம். கூடுமான வரை வீண் அலைச்சலைத் தவிர்த்து விடுவது நல்லது. வெளியிடங்களில் உணவு உண்பதைத் தவிர்க்கவும்.


**விருச்சிகம்:** வழக்கமான பணிகளில் மட்டுமே ஈடுபடவும். எதிர்பாராத செலவுகளைச் சமாளிக்கக் கடன் வாங்கவேண்டிய சூழ்நிலை ஏற்படக்கூடும். உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவை. சிலருக்கு எதிர்பாராத பயணங்களுக்கு வாய்ப்பு உண்டு.

**தனுசு:** அரசாங்க அதிகாரிகளைச் சந்திக்கும்போது பொறுமையைக் கடைப்பிடிப்பது அவசியம். வாழ்க்கைத்துணைவழி உறவுகளிடம் நீங்கள் எதிர்பார்த்த காரியம் அனுகூலமாக முடியும். அலுவலகத்தில் வழக்கமான நிலையே காணப்படும்.

**மகரம்:** கொடுத்த கடன் திரும்பக் கிடைக்கும். குடும்பத்தில் உறவினர்கள் வருகை மகிழ்ச்சி தரும். அலுவலகத்தில் பணிகள் அதிகரித்தாலும் சோர்வில்லாமல் செய்து பாராட்டு பெறுவீர்கள்.

**கும்பம்:** புதிய முயற்சிகள் சாதகமாக முடியும். கணவன் – மனைவி ஒருவரையொருவர் அனுசரித்துச் செல்வது நல்லது. எதிர்பார்த்த பணம்கைக்குவரும். பிள்ளைகளால்பெருமை உண்டாகும்.

**மீனம்:** உற்சாகமான நாளாக இருக்கும். ஆனால், புதிய முயற்சிகள் எதையும் மேற்கொள்ள வேண்டாம். சிலருக்கு திடீர்ச் செலவுகளால் கடன் வாங்கவும் நேரிடும். சகோதரர்களால் தேவையற்ற பிரச்சினைகள் ஏற்படக்கூடும்.



## யாழ்ப்பாணம்– கொழும்பு புதிய சொகுசு பஸ் சேவை

யாழ்ப்பாணம், செப்.5

இலங்கைப் போக்குவரத்துச்சபை, யாழ். சாலையால் யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்புக்குப் புதிதாக அதிசொகுசு பேருந்துச் சேவை கடந்த முதலாம் திகதி முதல் இரவு 20.45 மணிக்கு ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இதற்கு ஒரு வழிக்கட்டணமாக 2 ஆயிரத்து 800 ரூபா அறவிடப்படுகிறது.

பேருந்தில் பயணம் செய்வதற்கு நிகழ்நிலையில் ஆசனப்பதிவை மேற்கொள்ளலாம்.

அதுபோல யாழ்.மத்திய பேருந்து நிலையத்துக்குச் சென்று நேரடியாகவும் ஆசனப் பதிவை மேற்கொள்ளலாம் என்று யாழ். சாலை முகாமையாளர் அறிவித்துள்ளார். (ச-25)



## தீயணைப்பு பயிற்சிப்பட்டறை

யாழ்ப்பாணம், செப்.5

யாழ்.மாவட்டத்திலுள்ள எரிபொருள் நிரப்பு நிலையப் பணியாளர்களுக்கான தீயணைப்புத் தொடர்பான பயிற்சிப்பட்டறை இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் பிராந்திய அலுவலகத்தில் நேற்றுமுன்தினம் புதன்கிழமை நடைபெற்றது. கூட்டுத்தாபனத்தின் வட பிராந்திய முகாமையாளர் எஸ். சிவதரன் தலைமையில் நடைபெற்ற பயிற்சிப் பட்டறையில் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் தலைமைக்காரியாலய அதிகாரிகள் பயிற்சியை வழங்கியிருந்தனர். (ச-25,17)

## எலுமிச்சை விலை சடுதியாக அதிகரிப்பு

சாவகச்சேரி, செப். 5

சாவகச்சேரிச் சந்தையில் எலுமிச்சம்பழத்தின் விலை சடுதியாக அதிகரித்துள்ளது. கடந்த வாரம் கிலோ 200 ரூபாவாக விற்பனை செய்யப்பட்ட தேசிக்காய் நேற்றுமுன்தினம் புதன்கிழமை முதல் கிலோ ஆயிரம் ரூபாவாக விற்பனை செய்யப்பட்டது. தென்பகுதியிலிருந்து தேசிக்காய் வரவு இன்மையால் விலை அதிகரிப்பு ஏற்பட்டுள்ளது என்று சந்தை வியாபாரிகள் தெரிவித்தனர். (ச-25,9)



## தேசிய வாசிப்பு வார வினாவிடைப் போட்டி

மன்னார்,செப்.5

தேசிய வாசிப்பு மாதத்தை முன்னிட்டு மன்னார் நகரில் தெரிவுசெய்யப்பட்ட 5 பாடசாலை மாணவர்களுக்கிடையிலான வினாவிடை போட்டி மன்னார் நகர் பொதுநூலகத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்றது.

மன்னார் புனித சவேரியார் ஆண்கள் தேசிய பாடசாலை, புனித சவேரியார் பெண்கள் தேசிய பாடசாலை, எழுத்தூர் அன்னை திரேசா றோமன் கத்தோலிக்க அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை, சித்தி விநாயகர் இந்து தேசிய பாடசாலை மற்றும் அல் அஷார் பாடசாலை மாணவர்கள் போட்டியில் பங்கேற்றனர். போட்டியில் மன்னார் புனித சவேரியார் ஆண்கள் தேசிய பாடசாலை மற்றும் புனித சவேரியார் பெண்கள் தேசிய பாடசாலை ஆகியன ஒரே புள்ளிகளைப் பெற்று முதலாம் இடத்தைப் பெற்றன. எழுத்தூர் அன்னை திரேசா றோமன் கத்தோலிக்கத் தமிழ்க் கலவன் பாடசாலை இரண்டாம் இடத்தைப் பெற்றது. (ச-60)

## நூல் வெளியீடு

யாழ்ப்பாணம், செப்.5

யோகர் சுவாமிகள் காரைநகருக்குச் சென்ற நூற்றாண்டைக் கொண்டாடும் முகமாக உரையும் நூல் வெளியீடும் இன்று வெள்ளிக்கிழமை நண்பகல் 12மணிக்கு அரியாலை சித்திவிநாயகர் ஆலயத்தில் நடைபெறவுள்ளன.

யாழ்ப்பாண மாவட்ட சைவப்பிரகாசப் பேரவையின் ஏற்பாட்டில் இந்த நிகழ்வு இடம்பெறவுள்ளது. (ச-41)



## வல்லிபுரம் மாயவனுக்கு 21 இல் கொடியேற்றம்

யாழ்ப்பாணம், செப்.5

வரலாற்றுச் சிறப்புமிக்க வல்லிபுரம் ஆழ்வார் ஆலய வருடாந்த மஹோற்சவம் எதிர்வரும் 21ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி நடைபெறவுள்ளது. 29ஆம் திகதி திங்கட்கிழமை வெண்ணெய்த் திருவிழாவும், ஒக்ரோபர் மாதம் 1ஆம் திகதி புதன்கிழமை பாம்புத் திருவிழாவும், 3ஆம் திகதி வெள்ளிக்கிழமை வேட்டைத் திருவிழாவும், 4ஆம் திகதி சனிக்கிழமை சப்பறத்திருவிழாவும், 5ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை தேர்த்திருவிழாவும், முதலாம் திகதி திங்கட்கிழமை சமுத்திரத் தீர்த்தத் திருவிழாவும் இடம்பெறவுள்ளன. (ச-41-17)



## நூற்றாண்டு விழா

யாழ்ப்பாணம், செப்.5

மீசாலை வீரசிங்கம் மத்திய கல்லூரியின் நூற்றாண்டு ஆரம்ப நிகழ்வு கல்லூரி அதிபர் பொ. நடேசலிங்கம் தலைமையில் கடந்த 26 ஆம் திகதி நடைபெற்றது.

இதன்போது நூற்றாண்டு கொடி, நினைவுச்சின்னம், ரீ-சேர்ட் என்பன அறிமுகம் செய்துவைக்கப்பட்டன.

நிகழ்வில் தென்மராட்சி வலயக்கல்வி நிர்வாகப் பிரதிக் கல்விப் பணிப்பாளர் சு. ஸ்ரீகுமரன், ஓய்வுநிலை அதிபர்கள் கு. சிவானந்தம், திருமதி லலிதாமலர் முகுந்தன், சி. கந்தசாமி ஆகியோர் கலந்துகொண்டனர். (ச-41)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
உண்மை - நேர்மை - அஞ்சாமை

# சரியான பாதைக்கான நேரமிது!

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் ஆணையாளரின் அண்மைய அறிக்கை இலங்கைக்கு மகிழ்ச்சியளிக்கும்படி அமையவில்லை. ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் ஆணையாளரின் இறுதி அறிக்கை, சர்வதேசக் குற்றவியல் நீதிமன்றத்தின் ரோம் பிரகடனத்துக்கு இணங்குவதன் ஊடாக நிலைமாறுகால நீதிக்கு ஏதுவான சூழலை இலங்கை அரசாங்கம் உருவாக்கவேண்டும் என்று வலியுறுத்தியிருப்பதும், போருக்குப் பிந்தைய காலகட்டத்தில் இலங்கை அரசாங்கம் உண்மையான பொறுப்புணர்வுடன் நடக்கவில்லை என்று சுட்டிக்காட்டியிருப்பதும் நிச்சயம் இலங்கைக்கு அழுத்தங்களையே ஏற்படுத்தும்.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் 60ஆவது அமர்வு எதிர்வரும் திங்கட்கிழமை ஆரம்பமாகவிருக்கும் நிலையில், ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளரின் இலங்கை தொடர்பான முற்கூட்டிய அறிக்கை கடந்த மாத நடுப்பகுதியில் வெளியானது. அந்த அறிக்கைக்கு இலங்கை அரசாங்கம் வழங்கிய பதில்களையும் உள்ளடக்கி இப்போது இறுதி அறிக்கை வெளியிடப்பட்டிருக்கின்றது. இந்த அறிக்கையில் இலங்கையின் மீது பல குற்றச்சாட்டுகள் வைக்கப்பட்டுள்ளன. தடுப்புக்காவல் மரணங்கள், சித்திரவதைகள், பயங்கரவாதத் தடைச்சட்டப் பிரயோகம் என்பன இந்த அறிக்கையில் இடம்பிடித்திருக்கும் அதேநேரம், மனித உரிமை பாதுகாப்பாளர்கள், காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்கள் மீதான அச்சுறுத்தல்கள், கண்காணிப்புகள், பீதி உருவாக்கும் முயற்சிகள் என்பன தொடர்ந்து நடைபெறுகின்றன என அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டிருக்கின்றது. மனிதப்புதைகுழிகள் தொடர்பான விடயங்களும் இம்முறை அறிக்கையில் இடம்பிடித்திருக்கின்றன. மனிதப்புதைகுழிகள் தொடர்பாக இலங்கை அரசாங்கங்கள் சுயாதீனமான, சர்வதேச தரநிலைக்கேற்ற விசாரணைகளை மேற்கொள்ளவில்லை என்ற குற்றச்சாட்டுகளும் எழுந்திருக்கின்றன.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் ஆணையாளர் அறிக்கையால் இலங்கைக்கு நிச்சயம் அழுத்தங்கள் ஏற்படும். சர்வதேச சமூகத்தின் கண்காணிப்பு இலங்கைமீது தீவிரமடைவதற்கு இந்த அறிக்கை வாய்ப்புகளை ஏற்படுத்தும். சர்வதேசக் கடனுதவி, வர்த்தக சலுகைகள், வெளிநாட்டு முதலீடுகள் அனைத்தும் மனித உரிமை முன்னேற்றத்துடன் இணைக்கப்பட்டுள்ளதால், பொருளாதார ரீதியாகவும் பாதிப்பு உருவாகலாம். சர்வதேச நற்பெயர் மேலும் மோசமடைந்து, இலங்கை தனிமைப்படுத்தப்படுவதற்கான அபாயமும் அதிகரிக்கும். மனிதப் புதைகுழி தொடர்பான குற்றச்சாட்டை ஒரு போர்க் குற்றச்சாட்டு என்ற வகையிலும் நோக்கலாம். அவை தொடர்பில் உரிய விசாரணைகள் நடத்தப்படாவிட்டால், ஆதாரங்கள் சேகரிக்கப்பட்டு பாதுகாக்கப்பட்டு, எதிர்காலத்தில் சர்வதேச நீதிமன்றங்களில் வழக்குகள் தொடரப்படுவதற்கான வாய்ப்புகளும் இருக்கின்றன.

உண்மையான பொறுப்புணர்வுடன் சீர்திருத்தங்களை மேற்கொள்வதும், பயங்கரவாதத் தடைச் சட்டம் போன்ற சட்டங்களை நிறுத்தி மனித உரிமையைப் பாதுகாப்பதும், மனிதப்புதைகுழிகள் குறித்த விசாரணைகளை சர்வதேச தரநிலைக்கு ஏற்ப வெளிப்படையாக மேற்கொள்வதும் இந்தச் சிக்கல்களில் இருந்து இலங்கையை மீட்டெடுக்க இயலும். ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் ஆணையாளரின் அறிக்கையை எச்சரிக்கை மணி போன்றே இலங்கை அரசாங்கம் எடுத்துக்கொள்ளவேண்டும். இதைப் புறக்கணித்துச் செயற்பட்டால் அது நாட்டின் எதிர்காலத்தையும், மக்கள் நலனையும் நிச்சயம் ஆபத்துக்கு உள்ளாக்கும். இலங்கை தனது பழைய இழுத்தடிப்பு அரசியலை விட்டுவிட்டு, உண்மை, நீதி, பொறுப்புணர்வு ஆகியவற்றின் பாதையைத் தேர்ந்தெடுக்கவேண்டிய நேரம் இது என்பதைப் புரிந்துகொள்ளவேண்டும்.


செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
செய்தி : news@uthayan.com
விளம்பரம் : advt@uthayan.com



## நாளொரு நல்வார்த்தை

பணம் ஓர் அத்தியாவசியப் பொருள் ஆனால் மனித உழைப்பிற்கு முன்னால் அது கீழ்த்தரம் உடையது.

சாமெர்செட் மகம்



செயற்படாத

## அரச நிறுவனங்களுக்கு விரைவில் மூடுவிழா

கொழும்பு, செப்.5

**தேசிய பொருளாதாரத்துக்கோ அல்லது அரச சேவைகளுக்கோ எந்தவிதப் பங்களிப்பும் செய்யாத - செயற்படாத அரச நிறுவனங்களை மூடுவதற்கு அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது.**

பொதுமக்களுக்கு சேவைகளை வழங்குதல் மற்றும் பொருளாதார நடவடிக்கைகளை ஊக்குவித்தல் போன்ற நோக்கங்களுக்காக நிறுவப்பட்ட சில அரச நிறுவனங்கள், தற்போது அந்த நோக்கங்களுக்குப் பொருத்தமற்றவையாகவும், சந்தைத் தேவைகளுக்கு இணங்காதவையாகவும் மாறியுள்ளன.

அதன்படி தேசிய பொருளாதாரத்துக்குப் பங்களிப்புச் செய்யாத சட்டபூர்வ நிறுவனங்கள், அரச கூட்டுத்தாபனங்கள் மற்றும் அரசாங்கத்துக்குச் சொந்தமான நிறுவனங்களைத் தொடர்ந்து நடத்துவதை விட, அவற்றை மூடுவது பொருத்தமானது என அடையாளம் காணப்பட்டுள்ளது. இதற்கமைய, நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் என்ற வகையில் ஜனாதிபதி சமர்ப்பித்த யோசனையை அமைச்சரவை அனுமதித்துள்ளது. இதன்கீழ், தற்போது செயற்படாத நிலையில் உள்ள 33 அரச நிறுவனங்கள் இரண்டு கட்டங்களாக முறையான முறையில் கலைத்து மூடப்படவுள்ளன. இந்த நடவடிக்கை நிதி அமைச்சின்கீழ் நிறுவப்படும் ஒரு விசேட கலைப்புப் பிரிவின் மேற்பார்வையின்கீழ் மேற்கொள்ளப்படவுள்ளது. (ச-இ)



## இலஞ்ச ஊழல்கள் முறைப்பாடளிக்க வட்ஸ்அப் இலக்கம்

கொழும்பு, செப்.5

இலஞ்ச ஊழல் தொடர்பான குற்றச்சாட்டுகளைப் புகாரளிப்பதற்காக இலஞ்ச ஊழல் ஆணைக்குழு புதிய வட்ஸ்அப் இலக்கமொன்றை அறிமுகப்படுத்தியுள்ளது.

அதன்படி, இலஞ்சம் தொடர்பான கோரிக்கைகள் அல்லது இலஞ்சம் பெறுகின்ற சம்பவங்கள் தொடர்பான முறைப்பாடுகளை 077 777 1954 என்ற தொலைபேசி இலக்கத்தின் வட்ஸ்அப்மூலம் சமர்ப்பிக்கமுடியும் என்று ஆணைக்குழு தெரிவித்துள்ளது. (ச-இ)

## இத்தாலியப் பிரதி அமைச்சர் இலங்கை வந்தடைந்தார்

கொழும்பு, செப்.5

இத்தாலிய வெளிவிவகார மற்றும் சர்வதேச ஒத்துழைப்புக்கான பிரதி அமைச்சர் மரியா திரிபோடி உத்தியோகபூர்வ பயணம் மேற்கொண்டு நேற்று இலங்கை வந்தடைந்தார். இத்தாலியில் இருந்து இலங்கைக்கு மேற்கொள்ளப்படும் அதியுயர்மட்டப் பயணமாக இது கருதப்படுகின்றது. மரியா திரிபோடி இலங்கையின் பல உயர்மட்டப் பிரதிநிதிகளைச் சந்தித்துக் கலந்துரையாடவுள்ளார். பிரதி அமைச்சர் மரியா திரிபோடி பிரதமர் ஹரிணி அமரசூரியவைச் சந்திப்பதுடன், வெளிவிவகார அமைச்சர் விஜித ஹேரத்துடன் கலந்துரையாடவுள்ளார்



என்று இலங்கை வெளிவிவகார அமைச்சு தெரிவித்துள்ளது. (எ-இ)



## வறட்சியான காலநிலையால் நீர் பாவனையில் அதிகரிப்பு

கொழும்பு, செப்.5

நாட்டில் நிலவும் வறட்சியான வானிலையால் நீர்ப் பாவனை 10 சதவீதமாக அதிகரித்துள்ளது என்று தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகால் அமைப்புச்சபை தெரிவித்துள்ளது.

நீர்ப்பாவனை அதிகரித்தால் எதிர்வரும் நாள்களில் குடியிருப்புப் பகுதிகளுக்கான நீர் விநியோகம் மட்டுப்படுத்தப்படலாம் எனத் தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகால் அமைப்புச் சபையின் பிரதிப் பொது முகாமையாளர் வஜிர திரனகம சுட்டிக்காட்டியுள்ளார்.

அத்தியாவசியமற்ற செயல்களுக்கு நீரைப் பயன்படுத்துவதைத் தவிர்க்கவேண்டும் என்றும், பொறுப்பான மற்றும் திறமையான நீர்ப் பயன்பாட்டைக் கடைப்பிடிக்கவேண்டும் என்றும் அவர் பொதுமக்களிடம் கோரியுள்ளார். (எ-இ)

நாளை
சனிக்கிழமை - ஆவணி 21
06.09.2025
சுபநேரம் : 03.04 - 04.34
ராகுகாலம் : 09.04 - 10.34

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மக்களின் வாழ்வாதாரத்தைப் பாதிக்கும் அபிவிருத்தித் திட்டங்கள் வேண்டாம்



## மன்னார் பிரஜைகள் குழு எதிர்ப்பு

**மன்னார்,செப்.5**

**மன்னாரில் நடைமுறைப்படுத்தும் காற்றாலை, கனிய மணல் அகழ்வுத் திட்டங்களை, ஜனாதிபதி வெளியேற்றி, மக்களின் வாழ்விடங்களைப் பாதுகாக்க வேண்டும் என்று மன்னார் பிரஜைகள் குழுவின் தலைவர் அருட்தந்தை சந்தியோகு மாக்கஸ் அடிகளார் கோரிக்கை விடுத்துள்ளார். காற்றாலை மற்றும் கனிய மணல் அகழ்வுக்கு எதிராக, மன்னாரில் முன்னெடுக்கப்பட்டு வருகின்ற சுழற்சிமுறையிலான போராட்டம் 32 ஆவது நாளாக நேற்றுமுன்தினம் முன்னெடுக்கப்பட்டது.**

இதன்போது அவர் தெரிவிக்கையில், மன்னார் மாவட்டச் செயலகத்துக்கு மக்களின் வேண்டுகோளையும், மக்களின் வேதனைகளையும் அரசுக்குத் தெரிவிக்கவேண்டிய கடமை உள்ளது. எங்களுடைய உரிமைகளை நாங்கள் முழுமையாக அனுபவித்து வாழ்வதற்கான ஒரு சூழலை ஏற்படுத்தி, எமது மண் பறிபோவதைத் தடுத்துநிறுத்துவதை உறுதிசெய்யவேண்டும். ஏற்கனவே மன்னார்த்தீவில் அமைக்கப்பட்ட 30 காற்றாலை கோபுரங்களால் ஏற்பட்ட பாதிப்புகளும் உடனடியாக நிவர்த்தி செய்யப்படவேண்டும். மக்களின் வாழ்வாதாரத்தையும், வாழ்வியலையும் பாதிக்கின்ற செயற்பாடுகள் முற்றுமுழுதாக நிறுத்தப்படவேண்டும்-என்றார். (ச-56)

# கடும் கட்டுப்பாடு விதித்து தவிசாளர் விதிமீறுகிறார்

## வவுனியா வடக்குப் பிரதேசசபை உறுப்பினர்கள் விசனம்

வவுனியா,செப்.5

தவிசாளர் தொடர்ச்சியாக நிர்வாகச் செயற்பாடுகளுக்குள் தலையீடு செய்து குழப்பத்தை ஏற்படுத்திவருவதுடன், புதிய கட்டுப்பாடுகளையும் விதித்துள்ளார். இதனால் செயலாளர் உட்பட்ட உத்தியோகத்தர்கள் மன உளைச்சல் அடைந்துள்ளனர் என வவுனியா வடக்குப் பிரதேசசபை உறுப்பினர்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

ஆண் உத்தியோகத்தர்கள் முகச்சவரம் செய்யவேண்டும், சப்பாத்து அணியவேண்டும் போன்ற கட்டுப்பாடுகளை விதிப்பதுடன், களஞ்சியக் காப்பாளர் களஞ்சியசாலைக்குள்ளேயே இருக்கவேண்டும் என்றும் உத்தரவு பிறப்பித்துள்ளார். இதனால் நேற்றுமுன்தினம் செயலாளர் உள்ளிட்ட உத்தியோகத்தர்கள் சிலர் அலுவலகத்தில் இருந்து வெளியேறி பணிப்புறக்கணிப்பில் ஈடுபட முயற்சித்தனர்.

எனினும் உப தவிசாளர், ஆளும் கட்சி உறுப்பினர்கள் மற்றும் செயலாளர் உள்ளிட்டோர் பிரச்சினைகளைத் தீர்க்க கால அவகாசம் கோரியதுடன் அங்கம்வகிக்கும் கட்சித் தலைவர்களுடன் கலந்துரையாடி, முடிவெடுப்பதாக உத்தியோகத்தர்களிடம் உறுதியளித்ததை அடுத்து அவர்கள் தமது செயற்பாட்டைக் கைவிட்டனர். (ச-110)

புலமைப்பரிசில் பரீட்சையில்

# இறம்பைக்குளம் ம.வியில் 76 மாணவர்கள் சித்தி

வவுனியா, செப்.5

தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சைப் பெறுபேறுகள் நேற்று இரவு வெளியாகியிருந்த நிலையில் வவுனியா இறம்பைக்குளம் மகளிர் மகாவித்தியாலயத்தில் 76 மாணவர்கள் வெட்டுப்புள்ளிக்கு மேலான பெறுபேற்றைப் பெற்று சித்தியடைந்துள்ளனர்.

குறித்த பாடசாலையிலிலிருந்து புலமைப்பரீட்சைக்கு இம்முறை 154 மாணவர்கள் தோற்றியிருந்தனர். அவர்களில் 149 மாணவர்கள் 70க்கும் மேல் புள்ளிகளைப் பெற்றுள்ளனர். (ச-25, 110)



புலமைப்பரிசில் பரீட்சையில்

# வவுனியா தமிழ் ம. ம.வி. 75 மாணவர்கள் சித்தி


வெளியாகியுள்ள தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சைப் பெறுபேறுகளில் வவுனியா தமிழ் மத்திய மகாவித்தியாலயத்தில் 75 மாணவர்கள் வெட்டுப்புள்ளிக்கு மேல் புள்ளிகளைப் பெற்று சித்தியடைந்துள்ளனர். பரீட்சைக்கு 165 மாணவர்கள் தோற்றியிருந்த நிலையில் அவர்களில் 159 மாணவர்கள் 70க்கும் அதிகமான புள்ளிகளைப் பெற்றுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. (ச-25,110)

# காங்கேசன் துறைமுகத்தின் அபிவிருத்திகள் ஆராய்வு!

யாழ்ப்பாணம்,செப்.5

காங்கேசன்துறை துறைமுகத்தின் புனரமைப்பு மற்றும் அபிவிருத்தி தொடர்பான கலந்துரையாடல், யாழ்.மாவட்டச் செயலர் அலுவலகத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்றது.

கலந்துரையாடலில் இந்திய -இலங்கை கடற்போக்குவரத்துக்கு மேலதிகமாக, இந்தியாவிலிருந்து கப்பல் மூலம் பொருள்களைக் கொண்டுவருதல், என்ன பொருள்களைக்கொண்டுசெல்லலாம்? தொழில்வாய்ப்பு மற்றும் சாதக, பாதகங்கள் தொடர்பில் ஆராயப்பட்டன. அத்துடன் காங்கேசன்துறைத் துறைமுகத்தின் அபிவிருத்தித் தேவைகளுக்கான காணித் தேவைப்பாடு, துறைமுக அபிவிருத்தியை ஏற்படுத்துவதனூடாக எவ்வாறான சிறப்பான சேவைகளைப் பெற்றுக்கொள்ளமுடியும்?, அதனால் ஏற்படும் பாதக விளைவுகள் தொடர்பாகவும் கலந்துரையாடப்பட்டன. குறிப்பாகப் பிராந்திய இணைப்பை வலுப்படுத்துதல், வர்த்தகத்தை எளிதாக்குதல் மற்றும் வடக்கு மாகாணத்துக்கு புதிய வாய்ப்புகளை உருவாக்குதல், வேலைவாய்ப்புகள், சுற்றுலாத்துறை வளர்ச்சி, சுற்றுச்சூழல் தாக்கம், சமூக நடத்தையில் ஏற்படும் மாற்றம், அரச சேவைகள், போக்குவரத்துச் சேவைகள் போன்றவற்றின் அபிவிருத்திசார் விடயங்கள் தொடர்பாகவும் ஆராயப்பட்டன. (ச-66)





# அரச காணியை கையகப்படுத்திய குடும்பத்தை வெளியேற்றுங்கள்!

## மருதங்கேணி கிராம அமைப்புகள் கோரிக்கை

வடமராட்சி கிழக்கு மருதங்கேணியில், அரச காணியை அடாத்தாகக் கையகப்படுத்தியுள்ள அரச உத்தியோகத்தரின் குடும்பத்தை வெளியேற்றுமாறு மருதங்கேணி கிராம மட்ட அமைப்புகளாலும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

குறித்த காணியில் இருப்பவர் எந்தவித அனுமதியும் இன்றி, சட்டவிரோதமாகக் காணியைச் சுற்றி மதில் அமைத்துள்ளார். அதேவேளை இந்தக் காணியை மேலும் ஒரு குடும்பம் உரிமை கோரி வருதால், பல முரண்பாடுகள் ஏற்பட்டுள்ளன. இது தொடர்பில் உடன் நடவடிக்கை எடுக்கவேண்டும் என மருதங்கேணி கிராம மட்ட அமைப்புகள் சுட்டிக்காட்டின.

இந்தநிலையில் குறித்த அரச காணியை அடாத்தாகக் கையகப்படுத்தப்பட்டமை உறுதிப்படுத்தப்பட்டுள்ள நிலையில், ஒரு மாத காலப்பகுதிக்குள், காணியை கிராம அலுவலரிடம் ஒப்படைத்துவிட்டு வெளியேறுமாறு அரச உத்தியோகத்தரின் குடும்பத்துக்கு வடமராட்சி கிழக்குப் பிரதேச செயலரால் உத்தரவிடப்பட்டுள்ளது. (ச-27)

# யாழ்.விழிப்புலனற்றோர் சங்கத்தால் விழியிழந்தவர்களுக்கு மனைகள்!

யாழ்ப்பாணம், செப்.5

யாழ். விழிப்புலனற்றோர் சங்கம் காணி வீடின்றி அவலப்பட்டு வாழ்ந்துவரும் கண்ணிழந்த 18 உறவுகளுக்குத் தன்வந்தர்களின் நிதிப் பங்களிப்போடும் ஆலயங்கள், அறக்கட்டளைகளின் நிதிப்பங்களிப்போடும் பாதுகாப்பான சுகாதார வசதிகளோடு கூடிய வீடுகளை அமைத்துவழங்கியுள்ளது. அத்துடன் கிணறுகள், மலசலகூடங்கள், நீர் குளியலறைகள், மின்னிணைப்பு வேலைகள், மனைகளின் தலைவாயில் வேலைகளும் செய்துகொடுக்கப்பட்டுள்ளன.

இதற்காக கனடா குமரன் விளையாட்டுக் கழக அனுசரணையில், சிவபூமி அறக்கட்டளை, சந்நிதியான் ஆச்சிரமம், உசன் கந்தசாமி கோவில், ஆனந்த சீரடி சாயி தேவஸ்தானம் சிறுவிளான், சாவகச்சேரி பிரதேச சபை ஆகிய அமைப்புகள் அனுசரணை வழங்கியுள்ளன. அதன்படி மிருசுவில் பழைய வாய்க்கால் வீதி அருகில் அமைக்கப்பட்டுள்ள குமராபதி மனைத் தொகுதிகளை அங்குரார்ப்பணம் செய்து கையளிக்கும் நிகழ்வு யாழ்.விழிப்புலனற்றோர் சங்கத்தின் தலைவர் யோகலிங்கம் சுதாகரன் தலைமையில் கடந்த 24ஆம் திகதி நடைபெற்றது. நிகழ்வில் யாழ்.மாவட்டச் செயலர் ம. பிரதீபன் பிரதம அதிதியாகவும், பல்கலைக்கழக கலைப் பீடாதிபதி பேராசிரியர் சிவசுப்ரமணியம் ரகுராம் சிறப்பு அதிதியாகவும் கலந்துகொண்டனர். (ச-25)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 'எக்ஸ்பிரஸ் பேர்ள்' இழப்பீட்டை பயன்படுத்துவது குறித்து ஆய்வு



கொழும்பு, செப்.5

**எக்ஸ்பிரஸ் பேர்ள் கப்பலால் ஏற்பட்ட பாதிப்புத் தொடர்பில் கிடைக்கும் நட்ட ஈட்டை மீனவர்களுக்கான இழப்பீடு மற்றும் கரையோரப் பாதுகாப்புக்கு எவ்வாறு பயன்படுத்துவது என்பது தொடர்பில் சுற்றாடல், கமத்தொழில் மற்றும் வளங்களின் நிலைத்தன்மை தொடர்பான துறைசார் மேற்பார்வைக்குழு கவனம் செலுத்தியுள்ளது.**

ஏற்கனவே கிடைத்த நட்டஈட்டின் அளவு, அதில் மீனவர்களுக்கு இழப்பீடாக வழங்கப்பட்ட தொகை, கடலோரப் பாதுகாப்புக்குச் செலவிடப்பட்ட தொகை மற்றும் மீதவுள்ள பணத்தின் அளவு தொடர்பான விரிவான அறிக்கையை வழங்கவேண்டும் என்று மேற்பார்வைக்குழு அதிகாரிகளுக்கு அறிவுறுத்தல் வழங்கியுள்ளது.

சுற்றாடல், கமத்தொழில் மற்றும் வளங்களின் நிலைத்தன்மை பற்றிய துறைசார் மேற்பார்வைக்குழு அதன் தலைவர் நாடாளுமன்ற உறுப்பினர் ஹெக்டர் அப்புஹாமி தலைமையில் அண்மையில் நாடாளுமன்றத்தில் கூடியபோதே இந்த விடயங்கள் கலந்துரையாடப்பட்டன.

293 மில்லியன் ரூபா மீன்பிடித்துறையினருக்கு வழங்க வேண்டியுள்ளது என்று அதிகாரிகள் சுட்டிக்காட்டினர். சில மீனவர்கள் வெளிநாடுகள் சென்றுள்ளதாலும், இழப்பீட்டைப் பெறவேண்டிய நபர் முன்வராததாலும் இழப்பீட்டுத் தொகை நிலுவையில் உள்ளது என்றும், அவற்றை முழுமையாக வழங்க எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அதிகாரிகள் தெரிவித்தனர். மீனவர்களுக்காக பெறப்பட்ட தொகை செலுத்தப்படாமை தொடர்பில் குழு அதிருப்தி தெரிவித்ததுடன், முழுமையாகச் செலுத்த நடவடிக்கை எடுக்குமாறு வலியுறுத்தியது. (எ-இ)

## யானை, தொலைபேசியுடன் இணையாது மொட்டுக்கட்சி

*சாகர காரியவசம் தெரிவிப்பு*

கொழும்பு, செப்.5

ஐக்கிய தேசியக் கட்சி மற்றும் ஐக்கிய மக்கள் சக்தி என்பவற்றுடன் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனக் கட்சி ஒருபோதும் கூட்டணி அமைக்காது என்று அந்தக் கட்சியின் பொதுச்செயலாளர் சாகர காரியவசம் தெரிவித்துள்ளார்.

மொட்டுக் கட்சி தலைமையகத்தில் கடந்த திங்கட்கிழமை நடத்திய ஊடக சந்திப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது-

ஐக்கிய தேசியக் கட்சி மற்றும் ஐக்கிய மக்கள் சக்தி என்பன ஒருமித்த கொள்கைகளைக்கொண்ட கட்சிகளாகும். இவற்றில் இருந்து ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனக் கட்சி முற்றிலும் மாறுபட்ட கட்சியாகும். இந்தக் கட்சிகளினதும், எமது கட்சியினதும் கொள்கைகளுக்கிடையில் பெரும் வித்தியாசம் உள்ளது. எனவே, எந்தச் சூழ்நிலையிலும் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனக் கட்சி, இந்த இரு கட்சிகளுடனும் கூட்டணி அமைக்காது.

எமது கட்சியின் பயணம் மக்கள் விரும்பும்வகையில் தனிவழியில் தொடரும். ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனக் கட்சியின் கொள்கைகளை ஏற்கும் தரப்பினர் மாத்திரமே எம்முடன் இணைய முடியும். கடந்த காலங்களில் எம்முடன் கூட்டணி வைத்திருந்தவர்கள் கூட்டணி உறவைத் தொடர்வதில் எவ்விதத் தடையும் இல்லை - என்றார். (எ-44)

## ஹரக் கட்டா மீதான வழக்கு சாட்சி விசாரணை ஆரம்பம்

கொழும்பு, செப்.5

போதைப்பொருள் வர்த்தகர் எனக் கூறப்படும் ஹரக் கட்டா என்ற நதுன் சிந்தக விக்ரமரத்னவுக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்ட வழக்கின் சாட்சி விசாரணை நேற்றுக் கொழும்பு மேல் நீதிமன்றத்தில் நடைபெற்றது.

அரச பிரதி சொலிசிட்டர் ஜெனரல் சுதர்ஷன டி சில்வாவின் வழிகாட்டுதலின்கீழ் முறைப்பாட்டுத் தரப்பின் இருவரின் சாட்சியங்கள் பதிவுசெய்யப்பட்டன. அதன் பின்னர் மேலதிக சாட்சி விசாரணைக்காக வழக்கு ஒக்ரோபர் மாதம் 29ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டது.

வழக்கு விசாரணைக்கு அழைக்கப்பட்டபோது, கடுமையான பாதுகாப்பு ஏற்பாடுகளுக்கு மத்தியில் ஹரக்கட்டா நீதிமன்றத்தில் முற்படுத்தப்பட்டார். கடுமையான பரிசோதனைக்குப் பின்னரே மக்கள் நீதிமன்ற அறைக்குள் அனுமதிக்கப்பட்டனர். (எ-இ)



## இனிய பாரதியின் சகாக்கள் இருவர் கைது

கொழும்பு, செப்.5

இனிய பாரதியின் மேலும் இரு சகாக்கள் கடந்த திங்கட்கிழமை கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

இதில் ஒருவர் நாட்டில் இருந்து வெளியேற முயற்சித்த நிலையில், கட்டுநாயக்க விமான நிலையத்தில் வைத்துக் கைது செய்யப்பட்டுள்ளார் எனப் பொலிஸ் உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

இனியபாரதி என அழைக்கப்படும் கிழக்கு மாகாணசபை முன்னாள் உறுப்பினரும் முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்சவின் ஒருங்கிணைப்பாளருமான கே. புஷ்பகுமார் ஜூலை 26ஆம் திகதி கைதுசெய்யப்பட்டிருந்தார்.

திருக்கோவில் பிரதேசசபையின் முன்னாள் தவிசாளர் உதயகுமார் படுகொலை தொடர்பில் அவர் கைதுசெய்யப்பட்டிருந்தார்.

இனியபாரதியிடம் மேற்கொண்ட விசாரணையின் அடிப்படையில் குறித்த இருவரையும் குற்றப்புலனாய்வுப் பிரிவினர் கைதுசெய்துள்ளனர். (ச-இ)

## பருத்தித்துறையில் மனிதப் புதைகுழிகளுக்கு நீதிகோரிய போராட்டம்

யாழ்ப்பாணம், செப். 5

வடக்கு, கிழக்கு மனிதப் புதைகுழிகளுக்கும், தமிழ்மக்களுக்கு எதிராக இடம்பெற்ற இனப்படுகொலைக்கும் சர்வதேச நீதிகோரிப் பருத்தித்துறை நகரில் கையெழுத்துப் போராட்டம் கடந்த திங்கட்கிழமை முன்னெடுக்கப்பட்டது.

இந்தக் கையெழுத்துப் போராட்டத்தில் ஜனநாயகத் தமிழ்த்தேசியக் கூட்டணியின் செயலாளர் நா. இரட்ணலிங்கம், ஜனநாயகத் தமிழ்த்தேசியக் கூட்டணியின் பங்காளிக் கட்சிகளின் தலைவர்களான சுரேஷ் பிரேமச்சந்திரன், சி.வேந்தன், பருத்தித்துறை நகர சபையின் உப தவிசாளர், நகரசபை உறுப்பினர்கள், பருத்தித்துறைப் பிரதேசசபை உறுப்பினர்கள், இலங்கைத் தமிழரசுக்கட்சியின் உறுப்பினர்கள், தமிழ்த்தேசியப் பேரவை உறுப்பினர்கள், வர்த்தகர்கள் மற்றும் பொதுமக்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர். (ச-66)

## துப்பாக்கிச்சூடுகள் இருவர் கைது

கொழும்பு, செப்.5

மீட்டியாகொட மற்றும் பண்டாரகம பொலிஸ் பிரிவுகளில் நடந்த துப்பாக்கிச் சூட்டுச் சம்பவங்கள் தொடர்பாக இரண்டு சந்தேகநபர்கள் கடந்த திங்கட்கிழமை பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ளனர். கடந்த முதலாம் திகதி மீட்டியாகொட பொலிஸ் பிரிவின் மலவென்ன வீதியில் நபர்மீது நடத்தப்பட்ட துப்பாக்கிச்சூட்டுச் சம்பவத்துக்கு உதவினார் என்று கருதப்படும் ஒருவர் தலவாக்கலைப் பொலிஸ் பிரிவில் விசேட அதிரடிப் படையினரால் கைதுசெய்யப்பட்டுள்ளார். கடந்த மாதம் 21ஆம் திகதி பண்டாரகம பொலிஸ் பிரிவின் பொல்கொட பாலத்துக்கு அருகில் நடந்த துப்பாக்கிச்சூட்டுச் சம்பவத்துக்கு உடந்தையாக இருந்த 23 வயது நபர் ஒருவர், பாணந்துறை ஹிரண பகுதியில் களுத்துறை குற்றப் பிரிவு அதிகாரிகளால் கைதுசெய்யப்பட்டுள்ளார். (எ-இ)

## ராஜித, லான்சாவுக்கு வீட்டு உணவுகள்

கொழும்பு, செப்.5

விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள முன்னாள் அமைச்சர்களான நிமல் லான்சா மற்றும் ராஜித சேனாரத்ன ஆகியோருக்கு வீட்டிலிருந்து கொண்டு வரும் உணவுகளை உட்கொள்வதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது என்று சிறைச்சாலைகள் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இருவரின் கோரிக்கைகளுக்கு அமைய இந்த அனுமதி வழங்கப்பட்டுள்ளது என்று சிறைச்சாலைகள் ஆணையாளர் ஜகத் வீரசிங்க குறிப்பிட்டுள்ளார்.

முன்னாள் அமைச்சர் ராஜித சேனாரத்ன எதிர்வரும் 9ஆம் திகதிவரையும் முன்னாள் இராஜாங்க அமைச்சர் நிமல் லான்சா எதிர்வரும் 12 ஆம் திகதிவரையும் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர். (எ-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## துசிதவுக்கு தொடர் மறியல்

கொழும்பு,செப்.5
தேசிய லொத்தர் சபையின் முன்னாள் தலைவர் துசித ஹல்லொலுவவை செப்ரெம்பர் 18 ஆம் திகதி வரை மீண்டும் விளக்கமறியலில் வைக்குமாறு கொழும்பு நீதிவான் நீதிமன்றம் நேற்று வியாழக்கிழமை உத்தரவிட்டுள்ளது.
2017 மற்றும் 2019ஆம் ஆண்டுக்கு இடைப்பட்ட காலத்தில் தேசிய லொத்தர் சபைக்குச் சொந்தமான 478,000 ரூபாவுக்கும் அதிக பெறுமதியுடைய மடிக்கணினி, கையடக்கத் தொலைபேசி போன்ற பொருள்களை முறைகேடாகப் பயன்படுத்திய குற்றச்சாட்டில் அவர் கைதுசெய்யப்பட்டுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. (ச-இ)

### வெளிநாட்டுத் தொழிலாளர்களுக்கு

# ஜனாதிபதி நிதியத்தினூடாக புதிய திட்டங்கள் அறிமுகம்

கொழும்பு, செப். 5

**வெளிநாட்டு தொழிலாளர்களின் நலன்கருதி புதிய திட்டங்கள் விரைவில் செயற்படுத்தப்படவுள்ளன. முதற்கட்டமாக வெளிநாட்டுத் தொழிலாளர்களின் குழந்தைகளின் கல்விக்காக ஜனாதிபதி நிதியத்தின் ஊடாக நிதி உதவி வழங்கும் திட்டம் ஒன்று ஆரம்பிக்கப்படவுள்ளது.**

இந்தத் திட்டம் ஜனாதிபதி நிதியம், வெளிநாட்டு அலுவல்கள், வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் சுற்றுலா அமைச்சு மற்றும் வெளிநாட்டுவேலைவாய்ப்புப் பணியகம் ஆகியன இணைந்து செயற்படுத்தவுள்ளது.
இந்தத் திட்டத்தின் முக்கியமான நோக்கம், வெளிநாடுகளில் உயிரிழக்கும், துன்பங்களுக்கு உள்ளாகும், சிறைப்படுத்தப்படும் அல்லது காணாமற்போகும் இலங்கை தொழிலாளர்களின் இங்குள்ள குழந்தைகளின் பாடசாலை மற்றும் பல்கலைக்கழகக் கல்வியைப் பாதுகாப்பதாகும்.
மேலும் வெளிநாடுகளுக்குச் செல்லத் திட்டமிட்டுள்ள இளைஞர், யுவதிகளுக்கு வெளிநாட்டு மொழிகளைக் கற்பதற்கான நிதியுதவி வழங்குதல். மொழிப் பயிற்சிப் பாடசாலைகளில் உள்ள வளவாளர்களுக்கு மாதாந்தக் கொடுப்பனவு வழங்குதல்.
வெளிநாட்டு வேலைகளுக்குத் தேவையான திறன்களை மேம்படுத்துவதற்குக் கிராமப்புற இளையோருக்கு நிதியுதவி வழங்குதல்.
கிராமப்புறங்களில் சுற்றுலாத்துறையில் ஈடுபடும் திறமையான தொழிலாளர்களை உருவாக்குதல் என்பனவும் அறிமுகப்படுத்தப்படவுள்ளன என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-இ)

## கச்சதீவைக் கைவிட்டால் வடக்கிலும் கைவைப்பர்!

*தமிழக அரசியல்வாதிகளுக்கு எச்சரிக்கை*

கொழும்பு,செப்.5
கச்சதீவு அல்ல இலங்கையில் எந்தவொரு பகுதியும் உங்களுக்குச் சொந்தம் அல்ல என்பதை நடிகர் விஜய் உள்ளிட்ட தமிழக அரசியல்வாதிகள் புரிந்து கொள்ளவேண்டும் என்று உவிந்து விஜேவீர தெரிவித்துள்ளார்.
அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,
தமிழகத்தில் சட்டசபைத் தேர்தல் நடைபெறவுள்ளது. அதனாலேயே கச்சதீவு விவகாரம் சூடுபிடித்துள்ளது. குறிப்பாக நடிப்பில் இருந்து அரசியலுக்கு வந்துள்ள விஜய், ஜெயலலிதா, எம்.ஜி.ஆர் போன்றோர் செய்த வேலையைச் செய்வதற்கு முற்படுகின்றார். இவர்கள் கச்சதீவுடன் நின்றுவிடப்போவதில்லை. வடக்கிலும் கைவைக்ககூடும்- என்றார். (ச-44)

## படையினரைத் துன்புறுத்துவதே புதிய அரசாங்கத்தின் நோக்கம்

*சாகர காரியவசம் குமுறல்*


கொழும்பு, செப்.5
புதிய அரசாங்கத்தின் பிரதான நோக்கம் படையினரைத் துன்புறுத்துவதே என்று பொதுஜன பெரமுனவின் பொதுச்செயலாளர் சாகர காரியவசம் தெரிவித்துள்ளார்.
அஸ்கிரிய பீடத்தின் மகாநாயக்க தேரர்களான திப்பொட்டுவாவே ஸ்ரீ சித்தார்த்த சுமங்கல தேரர் மற்றும் வரக்காகொட ஞானரத்ன தேரர் ஆகியோருக்குக் கடிதம் ஒன்றை அனுப்பி இதனைத் தெரிவித்துள்ளார்.
அவர் மேலும் தெரிவிக்கையில்
தற்போதைய ஆட்சியாளர்கள் இராணுவத்தினருக்கு எதிரான வெறுப்புணர்வைத் தூண்டும் வகையில் செயற்படுகின்றனர்.
இராணுவத்தரப்பைத் தண்டிக்க வேண்டும் கூறிவருபவர்களைத் திருப்திப்படுத்தும் முயற்சியே இதுவாகும் - என்றார். (ச-இ)



## உயிர்த்த ஞாயிறு தாக்குதலைத் தடுக்காதோருக்கு பதவியுயர்வு

*நாமல் சுட்டிக்காட்டு*

கொழும்பு, செப்.5
உயிர்த்த ஞாயிறுத் தாக்குதல் சம்பவத்தைத் தடுக்கத் தவறியவர்களுக்கு இந்த ஆட்சியில் பதவி உயர்வு வழங்கப்பட்டுள்ளது. இப்படியான விடயங்களால் அரசாங்கம் தொடர்பில் மக்கள் மத்தியில் அதிருப்தி உருவாகியுள்ளது என்று நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ச தெரிவித்துள்ளார்.
அவர் மேலும் தெரிவிக்கையில்,
பிரபாகரன் உட்பட இலங்கையில் திட்டமிட்ட குற்றச்செயல்களில் ஈடுபட்ட தரப்புகளுடன் ராஜபக்சக்கள்தான் அதிகம் மோதியுள்ளனர். திட்டமிட்ட குற்றச்செயல்களில் ஈடுபடும் குழுக்களுடனும் நாம் மோதினோம்.
சர்ச்சைக்குரிய 323 கொள்கலன்கள் தொடர்பில் விசாரணை இல்லை. உயிர்த்த ஞாயிறுத் தாக்குதல் சம்பவத்தைத் தடுக்க தவறியவர்களுக்கு இந்த ஆட்சியில் பதவி உயர்வு வழங்கப்பட்டுள்ளது. இப்படியான விடயங்களால் அரசாங்கம் தொடர்பில் மக்கள் மத்தியில் அதிருப்தி உருவாகியுள்ளது- என்றார். (ச-44)



## கச்சதீவை மீட்காதுவிட்டால் தமிழ்நாடு தனியாகப் பிரியும்

*இந்திய மத்திய அரசுக்கு சீமான் எச்சரிக்கை*

சென்னை, செப்.5
கச்சதீவை இலங்கையிடமிருந்து மீட்காவிட்டால் இந்தியாவிலிருந்து தமிழ்நாடு பிரியும் என்று நாம் தமிழர் கட்சியின் ஒருங்கிணைப்பாளர் சீமான் இந்திய மத்திய அரசாங்கத்துக்கு எச்சரிக்கை விடுத்துள்ளார்.
தமிழகத்தில் தேர்தல் நடக்கவுள்ள நிலையில், கச்சதீவு விவகாரம் பேசுபொருளாகியுள்ளது. நேற்றுமுன்தினம் நடைபெற்ற பொதுக்கூட்டம் ஒன்றில் உரையாற்றும்போதே சீமான் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.
அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது
கச்சதீவு தமிழகத்தின் சொத்து. அது தமிழர்களுக்குச் சொந்தமானது. அதை இந்தியா எப்படிக் கொடுக்கமுடியும்? இந்தியமும் திராவிடமும் தமிழனத்துக்கும் தமிழத் தேசியத்துக்கும் எப்போதும் எதிரானவை என்பதை இதன் ஊடாக புரிந்துகொள்ளமுடியும்.
நாம் தமிழர் கட்சியின் ஆட்சி அமைந்தால் உறுதியாக கச்சதீவு மீட்கப்படும். அதற்கான தீர்மானம் சட்டசபையில் நிறைவேற்றப்பட்டு நெய்தல் படை அமைக்கப்பட்டு மீனவர்களின் பாதுகாப்பு உறுதிப்படுத்தப்படும்.
**கச்சதீவை இந்தியா மீட்காவிடின் தமிழ்நாடு பிரியும். சிங்களவர்கள் நண்பர்கள் என்றால் நாம் யார் எனக் கேள்வியெழுப்புகிறோம். அவர்கள்தான் முக்கியம் என்றால், எம்மைப் பிரித்துவிடுங்கள் எனக் கோருவோம் - என்றார்.** (ச-இ)

## தமிழ் மக்களின் நம்பிக்கையை அரசாங்கம் காப்பாற்றும்

*அமைச்சர் விஜேபால தெரிவிப்பு*

கொழும்பு,செப்.5
தேசிய மக்கள் சக்திமீது தமிழ் மக்கள் வைத்த நம்பிக்கை மேலும் அதிகரித்துள்ளது என்று பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் ஆனந்த விஜேபால தெரிவித்துள்ளார்.
அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-
ஜனாதிபதித் தேர்தல் மற்றும் பொதுத்தேர்தலின்போது தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்துக்கு வடக்கு மக்கள் ஆதரவு வழங்கினர். மக்கள் அன்று வைத்த அந்த நம்பிக்கை இன்றும் அவ்வாறே உள்ளது.
ஜனாதிபதியின் வடக்கு விஜயத்தின்மூலம் அதனை அறியக்கூடியதாக இருந்தது. வடக்கு, தெற்கு என எம்மிடம் பாகுபாடு இல்லை. இனவாத எண்ணமும் கிடையாது. இலங்கையர்களாக அனைவரும் முன்னோக்கிச் செல்லவேண்டும் என்பதே எமது நோக்கம். அதனால் தான் தேசிய சமத்துவத்தைக் கட்டியெழுப்புவதற்குரிய அடித்தளம் இடப்பட்டுள்ளது.
போர்ச் சூழ்நிலையால் வடக்கு மக்கள் பெரிதும் பாதிக்கப்பட்டனர். அதனால் பல பிரச்சினைகளுக்கு முகங்கொடுத்துவருகின்றனர். வறுமை, வேலையின்மை, தொழிற்றுறைகள் இன்மை, காணிப் பிரச்சினை எனப் பல பிரச்சினைகள் உள்ளன. அவை தொடர்பில் நாம் அவதானம் செலுத்தியுள்ளோம் - என்றார். (ச-44)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நடப்பாண்டில் 5,117 கண் தானங்கள்



கொழும்பு, செப்.5
நடப்பாண்டின் முதல் எட்டு மாதங்களில் 5,117 கண் தானங்கள் பதிவாகியுள்ளதாக இலங்கைக் கண் தானச்சங்கம் தெரிவித்துள்ளது.

இலங்கையைச் சேர்ந்த ஆயிரத்து 144 நோயாளர்களுக்கும் 3 ஆயிரத்து 973 வெளிநாட்டு நோயாளர்களுக்கும் இவ்வாறு கண் தான சத்திரசிகிச்சை மேற்கொள்ளப்பட்டுள்ளதாக அந்தச்சங்கத்தின் தலைவர் சம்பத் டி சில்வா தெரிவித்துள்ளார்.

மேலும், நடப்பாண்டின் முதல் எட்டு மாதங்களில் கண் மாற்றுச்சத்திரசிகிச்சைகளுக்காக 592 திசுக்கள் வழங்கப்பட்டுள்ளதுடன் இதுவரையில் சத்திரசிகிச்சைக்காக மொத்தம் 18,326 திசுக்கள் வழங்கப்பட்டுள்ளன என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-இ)

# சர்வதேச உடன்படிக்கை மூலமாக அரசியல் பழிவாங்கல் வேண்டாம்

## எதிர்க்கட்சித் தலைவர் வேண்டுகோள்

**கொழும்பு, செப்.5**

**சிவில் மற்றும் அரசியல் உரிமைகள் தொடர்பான சர்வதேச உடன்படிக்கை சட்டத்தை பயன்படுத்தி அரசியல் பழிவாங்கல்களில் ஈடுபடவேண்டாம். அது முற்றிலும் தவறானதும் ஜனநாயகத்தை மீறும் நடவடிக்கையாகும் என்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ வலியுறுத்தியுள்ளார். உதய கம்மன்பில தலைமைவகிக்கும் பிவித்துரு ஹெல உறுமயக் கட்சியின் உறுப்பினர்களுக்கும், எதிர்க்கட்சித் தலைவருக்கும் எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் நேற்றுமுன்தினம் சந்திப்பு ஒன்று நடைபெற்றது. அதிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.**

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது-

மனித உரிமைகளைப் பாதுகாப்பதற்கும், சமூகத்தில் அமைதி, ஒற்றுமை, சகோதரத்துவம் மற்றும் நல்லிணக்கத்தை மேம்படுத்தவும், சமூக குழுக்கள் மத்தியில் சகோதரத்துவத்துடன் வாழும் நாகரிகமான மற்றும் அமைதியான சமூகத்தை உருவாக்கும் முகமாகவே அனைத்துலகக் குடியியல் மற்றும் அரசியல் உரிமைகள் உடன்படிக்கைச் சட்டம் உருவாக்கப்பட்டது.

இந்தச் சாசனம் உள்நாட்டுச் சட்ட ஒழுங்குவிதிகளால் அதிகாரமளிக்கப்பட்டு நடைமுறைப்படுத்தப்படும் போது, சில சந்தர்ப்பங்களில், மனித உரிமைகளைப் பாதுகாப்பதற்குப் பதிலாக தனிநபரின் மனித உரிமைகளை மீறுவதற்கும், அல்லது அரசியல் ரீதியாக தனிநபர்களைத் துன்புறுத்துவதற்கும், அரசியல் நோக்கங்களுக்காக அவர்களைப் பின்தொடர்வதற்கும் பயன்படுத்தப்பட்டுள்ளது.

இந்தச் சாசனத்தைப் பயன்படுத்தி மனித உரிமைகளைப் பாதுகாப்பதற்கு நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று அரசாங்கத்திடம் வேண்டுகோள் விடுக்கின்றேன். மனித உரிமை மீறல்கள் அல்லது அரசியல் பழிவாங்கும் நடவடிக்கைகளில் ஈடுபடவேண்டாம் என்றும் அரசாங்கத்தை கேட்டுக்கொள்கிறேன்-என்றார். (எ-இ)

# பேருந்து விபத்தில் 20 பேருக்கு காயம்

கொழும்பு, செப். 5
எல்ல வெல்லவாய பிரதான வீதியில் பேருந்தொன்று பள்ளத்தில் வீழ்ந்து விபத்துக்கு உள்ளானதில் 20 பேர் காயமடைந்தனர்.

காயமடைந்தவர்களில் சிலரின் நிலைமை கவலைக்கிடம் என்று கூறப்பட்டது. மீட்புப் பணிகள் இரவிரவாக முன்னெடுக்கப்பட்டன. (ம)

# பணச்சூதாட்டம் ஒழுங்கு சட்டம் நடைமுறையில்!

கொழும்பு, செப்.5
பணச் சூதாட்டத்தை ஒழுங்குபடுத்தும் அதிகாரசபைச் சட்டவரைவை சபாநாயகர் நேற்றுமுன்தினம் சான்றுரைப்படுத்தினார். கடந்த 19ஆம் திகதி நாடாளுமன்றத்தில் இரண்டாவது மதிப்பீட்டு விவாதத்தை அடுத்து திருத்தங்களுடன் இந்தச் சட்டவரைவு நிறைவேற்றப்பட்டது.

அதற்கமைய, இந்தச் சட்டமூலம் 2025ஆம் ஆண்டின் 17ஆம் இலக்க பணச்சூதாட்டத்தை ஒழுங்குபடுத்தும் அதிகாரசபைச் சட்டமாக நடைமுறைக்கு வந்துள்ளது.

இலங்கையில் பணச்சூதாட்டத் தொழிலை ஒழுங்குபடுத்தல், பணச்சூதாட்டச் செயற்பாடுகளுக்குத் தனியான ஒழுங்குபடுத்தும் நிறுவனமாக பணச்சூதாட்டத்தை ஒழுங்குபடுத்தும் அதிகாரசபையை ஸ்தாபித்தல் என்பவற்றுக்கு இந்தச் சட்டம் வழி வகுக்கின்றது. (ச-இ)

**வீட்டுடன் காணி விற்பனைக்கு**
மானிப்பாய் உடுவில் பிரதான வீதியில்
5 1/2 பரப்பு காணி, வீடு உடன்
விற்பனைக்கு உண்டு.
உரிமையாளர்:- 076 322 5545

# மறுசீரமைப்புக்கு எதிர்ப்பு: மின்சார சபையினர் போர்

கொழும்பு, செப். 5
இலங்கை மின்சார சபையில் மேற்கொள்ளவுள்ள மறுசீரமைப்புகளுக்கு எதிர்ப்பு தெரிவித்து, மின்சார சபையின் தொழிற்சங்கத்தினர் நேற்று நள்ளிரவு முதல் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

முன்வைக்கப்பட்டுள்ள கோரிக்கைகளுக்கு எதிர்வரும் 21ஆம் திகதிக்குள் தீர்வு கிடைக்காவிடின் தொடர் பணிப்புறக்கணிப்பு போராட்டத்தில் ஈடுபடுவோம் என இலங்கை மின்சார சபை சுதந்திர சேவை சங்கத்தின் செயலாளர் பிரபாத் பிரியந்த தெரிவித்துள்ளார். (ம)



மன்னார் நானாட்டான் டிலாசால் கல்லூரியின் 125ஆவது ஆண்டு நிறைவையொட்டி இரத்ததான முகாம் நானாட்டான் டிலாசால் கல்லூரி வளாகத்தில் கல்லூரி முதல்வர் அருட்சகோதரர் ஏ.மனோரஞ்சிதன் தலைமையில் கடந்த சனிக்கிழமை இடம்பெற்றது. மன்னார் மாவட்டப் பொதுமருத்துவ மனையின் இரத்த வங்கியின் உதவியுடன் முன்னெடுக்கப்பட்ட குறித்த இரத்ததான முகாமில் பலர் கலந்துகொண்டு இரத்த தானம் செய்தனர். (ச-56)

# மரண அறிவித்தல்

| தோற்றம் | | மறைவு |
|---|---|---|
| 26 . 08 . 1940 |  | 02 . 09 . 2025 |

## திருமதி சிவக்கொழுந்து இராசையா

யாழ்-புத்தூர் கிழக்கு, புத்தூரைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சிவக்கொழுந்து இராசையா அவர்கள் கடந்த (02.09.2025) செவ்வாய்க்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வீரகத்தி-கற்பகம் தம்பதியரின் இளைய மகளும், இராசலிங்கம்-பொன்னம்மா தம்பதியரின் அன்பு மருமகளும், இராசையா அவர்களின் அன்பு மனைவியும், விஸ்ணுகரன் (கனடா), காலஞ்சென்ற சத்தியபாமினி மற்றும் சதீஷ்கரன் (கனடா) ஆகியோரின் அன்புத் தாயாரும், ரூபராணி (கனடா), தனரூபினி (கனடா) ஆகியோரின் அன்பு மாமியாரும், ஜதுஷன், பூமிகா, டனிஷன், மானஷா, யாஸ்வின் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், காலஞ்சென்றவர்களான நாகலிங்கம், தங்கம்மா, கனகம்மா மற்றும் சின்னம்மா ஆகியோரின் அன்புச் சகோதரியும் காலஞ்சென்ற இராசம்மாவின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (05.09.2025) வெள்ளிக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக புத்தூர் கிழக்கு அந்திரானை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

**தொடர்புகளுக்கு:**
**இராசையா-077 900 3712**
**[illegible]-647 990 7009**
**சதீஷ்-416 319 8007**

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் சுவாமி கோவில் வருடாந்த மஹோற்சவம் - 2025

### தற்காலிக கடை இட ஒதுக்கீடு.

ஆலயத்தின் வருடாந்த மஹோற்சவம் 21.09.2025ம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது. தலத்தின் மஹோற்சவ காலத்தில் தற்காலிக கடைகள் அமைப்பதற்கு இடம் ஒதுக்கீடு செய்யப்படவுள்ளது. கடைகள் தொகுதி வாரியாக பின்வரும் வகையில் அமையும்.

- ஐஸ்கிறீம்
- மணிக்கடை
- இனிப்பு வகை,
- கச்சான் கடை
- தேனீர் கடை

**முக்கிய குறிப்பு**

- முதல் மூன்று கடைத்தொகுதிகளுக்குமான இடம் பகிரங்க ஏலத்தில் கூறிய கூறுவிலைக்கு வழங்கப்படும். ஏனைய தொகுதிக்கான அறவீடு அடிக்கணக்கில் அறவிடப்படும்.
- அக்கறையுடைய வர்த்தகர்கள் முன்கூட்டியே இட ஒதுக்கத்தை பெற்று அது தொடர்பான வாடகைப் பணத்தை முழுமையாக செலுத்தி உங்கள் இடங்களை உறுதிப்படுத்திக் கொள்ளவும்.
- விபரங்கள் வழங்க வேண்டிய படிவங்கள் கோவில் அலுவலகத்தில் அன்றைய தினம் பெற்றுக்கொள்ளலாம்.
- ஏலம் போடும் நாள் 11.09.2025ம் திகதி வியாழக்கிழமை மு.ப.10.00 மணி.
- ஆலய நிர்வாகத்தின் முடிவே இறுதி முடிவாகும்.

**தொலைபேசி இலக்கம்**
**021 226 3074, 021 205 6644**

**துன்னாலை வடக்கு,**
**புலோலி.**

**பெறுநர்**
**வல்லிபுர ஆழ்வார் கோவில்**

(CR 45993) E

## மரண அறிவித்தல்



**திருமதி மேரி மாகிறெற் அஞ்சலா (செல்வம்)**

சில்லாலையைப் பிறப்பிடமாகவும், யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி மேரி மாகிறெற் அஞ்சலா அமலநாதன் (செல்வம்) அவர்கள் நேற்று (04.09.2025) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான யோசவ் மரியநாயகம்-மேரி பீலிக்ஸ் நற்குணம் தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான சூசைப்பிள்ளை-திரேசம்மா தம்பதியரின் அன்பு மருமகளும், எட்மன் அமலநாதன்-(மோகன்-லைடன் புடவை நிலையம்) அன்பு மனைவியும், அன்ரனி பிரசநாத்தின் பாசமிகு தாயாரும், கல்பனாவின் மாமியாரும், அருட்பணி M.L மொன்போட், மரிய கொறற்றி சுசீலா (கனடா) காலஞ்சென்றவர்களான அன்ரனி அல்பேட், மரிய கிறிஸ்ரி றொபேட் ஆகியோரின் அன்புச் சகோதரியும், சுகந்தினி, இந்திரா, வசந்தி, அசோகன், சாந்தி காலஞ்சென்றவர்களான யோசவ் செல்லா, றஞ்சன் ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (05.09.2025) வெள்ளிக்கிழமை பிற்பகல் 02.00 மணியளவில் அவரது இல்லத்திலிருந்து எடுத்துச் செல்லப்பட்டு சில்லாலை கதிரை மாதா ஆலயத்தில் பிற்பகல் 03.00 மணிக்கு இரங்கல் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்பட்டு பின் கதிரை மாதா சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளுகின்றோம்.

**இல,49,**
**பழைய பூங்கா வீதி,**
**யாழ்ப்பாணம்.**

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

## மரண அறிவித்தல்



**தோற்றம்**
**14.08.1974**

**மறைவு**
**03.09.2025**

## இராஜேந்திரம் சுதேஸ்குமார்

கொக்குவில் மேற்கினை பிறப்பிடமாகவும், டச்சு வீதி, பெரிய விளானை வசிப்பிடமாகவும் கொண்ட இராசேந்திரம் சுதேஸ்குமார் (சுரேஸ்) அவர்கள் நேற்று முன்தினம் (03.09.2025) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற இராசேந்திரம் மற்றும் தங்கலட்சுமி தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான முத்துராசா - சரஸ்வதி தம்பதியரின் அன்பு மருமகனும், யோகேஸ்வரி (கிளி) அவர்களின் கணவரும், தனுஸ்குமார், மதுஸ்குமார், தருணி ஆகியோரின் பாசமிகு தந்தையும், காலஞ்சென்ற சுபாசினி மற்றும் யெயக்குமார், பாலகுமார், லதாசினி ஆகியோரின் சகோதரனும், புஸ்பகலாவின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (05.09.2025) வெள்ளிக்கிழமை அவரது இல்லத்தில் முற்பகல் 10.00 மணியளவில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக பெரியவிளான் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

**டச்சு வீதி,**
**பெரியவிளான்.**

**தகவல்:**
**குடும்பத்தினர்**
**077 085 2213**

(CS/59319) JK

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புதிய குடியேற்றச் சட்டத்தின் மூலம்

# ஈழத் தமிழர்கள் இந்தியாவில் சட்டபூர்வமாகத் தங்க அனுமதி

ஈழத் தமிழர்கள் இந்தியாவில் சட்டவிரோத குடியேறிகள் என்றல்லாமல் சட்டபூர்வமாகத் தங்குவதற்கு அனுமதி வழங்கும் வகையில் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

போர் மற்றும் பொருளாதார நெருக்கடி காரணமாக இலங்கையை விட்டு வெளியேறிய இலங்கைத் தமிழர்கள், இந்தியாவில் குறிப்பாக தமிழ்நாட்டில் பல்வேறு முகாம்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர். எனினும், அவர்களுக்கு இன்றுவரை குடியுரிமை வழங்கப்படவில்லை. 'சட்டவிரோத குடியேறிகள்' என்ற பெயரிலேயே அவர்கள் நடத்தப்பட்டனர்.

ஈழத் தமிழர்களுக்கு இந்தியக் குடியுரிமை வழங்க வேண்டும் என்று முன்வைக்கப்பட்ட பல்வேறு கோரிக்கைகள் செவிமெடுக்கப்படவில்லை. இந்த நிலையில், செப்ரெம்பர் மாதம் முதலாம் திகதி இந்தியாவில் நடைமுறைக்கு வந்துள்ள, 'புதிய குடியேற்றச் சட்டத்தின் கீழ்' ஈழத் தமிழர்கள் சட்டப்பூர்வ குடியேறிகளாகத் தங்குவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

இதன்படி, 2015ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 9ஆம் திகதிக்கு முன்னர், உரிய ஆவணங்கள் இல்லாமல் இந்தியாவுக்குள் நுழைந்த ஈழத் தமிழர்கள் சட்டவிரோத குடியேறிகள் அல்லர் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. அத்துடன், சில தண்டனை விதிகளிலும், ஈழத் தமிழர்களுக்கு விலக்கு வழங்கப்பட்டுள்ளது. (அ-ம-இ)

## சி.ஐ.டி.யின்...

குற்றப் புலனாய்வுத் திணைக்களத்துக்கு வழங்குவதற்கு அரசாங்கம் அவதானம் செலுத்தியுள்ளது என அறியமுடிகின்றது.

அரசாங்க உயர்மட்ட அதிகாரிகளுக்கிடையில் அண்மையில் நடைபெற்ற கலந்துரையாடலின்போது இது தொடர்பிலும் கவனம் செலுத்தப்பட்டுள்ளது எனத் தெரியவருகின்றது.

இந்த விடயம் தொடர்பில் பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் தெரிவித்ததாவது:- அமைச்சர்களுக்கு தற்போது அதிகார பூர்வ வதிவிடங்கள் ஒதுக்கப்படவில்லை. 51 அதிகாரபூர்வ வதிவிடங்கள் உள்ளன. அவை நாட்டின் அபிவிருத்திக்காக பயன்படுத்தப்படும். அரசாங்க நிறுவனங்களை நடத்துவதற்கு சில இடங்கள் தேவைப்படுகின்றன. அதற்காக சில வதிவிடங்கள் பயன்படுத்தப்படும். சி.ஐ.டிக்கு இந்த வதிவிடம்தான், அந்த வதிவிடம்தான் என முடிவெடுக்கவில்லை. ஆனால் சி.ஐ.டிக்கு இடமொன்று கோரப்பட்டுள்ளது. இது தொடர்பில் எதிர்காலத்தில் முடிவெடுக்கப்படும் - என்றார். (அ-ம-44)

## 4 என்புத்...

புதைகுழி மீதான இரண்டாம் கட்ட அகழ்வுப் பணிகளின் 43ஆவது நாள் நடவடிக்கைகள் நேற்று முன்னெடுக்கப்பட்டன. இதன்போதே, மேலும் 4 என்புத் தொகுதிகள் புதிதாக அடையாளம் காணப்பட்டுள்ளன. அத்துடன், ஏற்கனவே அடையாளம் காணப்பட்ட என்புத் தொகுதிகளில் 11 என்புத்தொகுதிகள் நேற்று அகழ்ந்து எடுக்கப்பட்டுள்ளன.

செம்மணிப் புதைகுழியில் இருந்து இதுவரை 235 என்புத்தொகுதிகள் அடையாளம் காணப்பட்ட நிலையில், 224 என்புத்தொகுதிகள் அகழ்ந்து எடுக்கப்பட்டுள்ளன.

யாழ்ப்பாணம் மேலதிக நீதவான் செ.லெனின்குமார் இந்த அகழ்வுப் பணிகளைக் கண்காணித்துவருகின்றார் என்பது குறிப்பிடத்தக்கது. (அ-ம-26)

## தெல். துர்காதேவி...

இடம்பெற்றது. தேர்த்திருவிழாவை முன்னிட்டு நேற்றுக் காலை 7.30 மணியளவில் வசந்தமண்டபப் பூசை வழிபாடுகள் ஆரம்பமாகின. அதனைத் தொடர்ந்து துர்க்கை அம்மன் திரு நடனத்துடன் உள் வீதியில் உலா வந்து தொடர்ந்து காலை 9 மணியளவில் சித்திரத் தேரில் ஆரோகணித்தார். அதனைத் தொடர்ந்து திருப்பல்லாண்டு ஓதப்பட்டுச் சிதறு தேங்காய்கள் உடைக்கப்பட்டதைத் தொடர்ந்து காலை 9.15 மணியளவில் அடியவர்களின் அரோகராக் கோஷம் முழங்கச் சித்திரத் தேர்ப் பவனி ஆரம்பமானது. சித்திரத் தேர் முற்பகல் 10 மணியளவில் இருப்பிடம் வந்தடைந்ததைத் தொடர்ந்து அடியவர்கள் அர்ச்சனை செய்து வழிபாடாற்றினர்.

நூற்றுக்கணக்கான ஆண் அடியவர்கள் பல வகையான காவடிகள் எடுத்தும், அங்கப் பிரதட்சணை எடுத்தும், பெண் அடியவர்கள் அடியழித்தும், கற்பூரச் சட்டிகள் எடுத்தும் நேர்த்திக் கடன்களை நிறைவேற்றினர். (அ-ம-66)

## ஓ.எம்.பி....

ஓ.எம்.பி. எனப்படும் காணாமல் ஆக்கப்பட்டோர் தொடர்பான அலுவலகத்துக்கு 25 உப குழுக்களை அமைப்பதற்கு அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது.

காணாமல் ஆக்கப்பட்டோர் தொடர்பான அலுவலகத்துக்கு இதுவரை 16 ஆயிரத்து 966 முறைப்பாடுகள் வழங்கப்பட்டுள்ளன. அவற்றில், 10 ஆயிரத்து 517 முறைப்பாடுகள் தொடர்பில் இன்னமும் விசாரணைகள் ஆரம்பிக்கப்படவில்லை. இதையடுத்தே, விசாரணைகளைத் துரிதப்படுத்தும் நோக்கில் 25 உபகுழுக்களை அமைக்க அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

2027ஆம் ஆண்டுக்குள் விசாரணைகளை நிறைவுசெய்யும் வகையிலேயே இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. ஓய்வுநிலை நீதிபதிகள், சிரேஷ்ட நிர்வாக அலுவலர்கள், சட்டத்தரணிகள் உள்ளிட்டவர்களை வைத்தே இந்த உபகுழுக்கள் அமைக்கப்படவுள்ளன.

எதிர்வரும் வரவு - செலவுத் திட்டத்தில், காணாமல் ஆக்கப்பட்டோர் தொடர்பான அலுவலகத்தின் உப குழுக்களுக்கான ஒதுக்கீடுகள் மேற்கொள்ளப்படும் என்றும் தெரியவருகின்றது. (அ-ம-44)

## சபையைத்...

எச்சரித்தார். யாழ்ப்பாணம் மாநகரப் பகுதியில் அமைக்கப்பட்ட விளம்பரப் பலகை தொடர்பில் சபையில் நேற்றுக் கடும் வாக்குவாதங்கள் ஏற்பட்டன. ஒரு கட்டத்தில் அனைத்து உறுப்பினர்களும் ஏட்டிக்குப் போட்டியாக கருத்துகளை முன்வைத்ததால் பெரும் குழப்பங்கள் ஏற்பட்டன.

இதைத் தொடர்ந்தே, சபையை அமைதியான முறையில் தொடர்ந்து நடத்த விடாவிட்டால், பொலிஸாரின் உதவியைப் பெற்று சபையை நடத்த வேண்டியிருக்கும் என்று முதல்வர் மதிவதனி தெரிவித்தார். இதையடுத்து, 'தேவைப்பட்டால் இராணுவத்தையும் அழையுங்கள். ஆனால், ஊழல் மோசடிகளுக்கு எதிராக நீதியான விசாரணைகள் நடத்தப்பட வேண்டும் என்ற எமது கோரிக்கையில் மாற்றம் வராது' என்று உறுப்பினர் நிசாந்தன் பதில் வழங்கினார்கள். (அ-ம-26)

## விளம்பரப்...

நேற்றுக் காலை மாநகர முதல்வர் மதிவதனி விவேகானந்தராஜா தலைமையில் இடம்பெற்றது.

இதன்போது சம்பந்தப்பட்ட விளம்பரப் பலகை தொடர்பில் உறுப்பினர்கள் பல்வேறு கேள்விகளை எழுப்பினார்கள். இதன்போது, 'அவ்வாறான அனுமதி வழங்கப்பட்டமை தொடர்பில் தனக்கு எதுவும் தெரியாது' என்று மாநகர முதல்வர் தெரிவித்தார். இதையடுத்து, 'மாநகர முதல்வர், மாநகர ஆணையாளர் ஆகியோருக்குத் தெரியாமல் விளம்பரப் பலகைக்கு அனுமதி வழங்கப்பட்டமை பாரதூரமான விடயம்' என்று உறுப்பினர்கள் சுட்டிக்காட்டினார்கள். இந்த விடயம் தொடர்பான ஆவணங்களையும் தங்களின் குற்றச்சாட்டுக்கான நியாயபூர்வமான ஆதாரங்களாக உறுப்பினர்கள் முன்வைத்தனர்.

நீண்ட விவாதங்களைத் தொடர்ந்து குறித்த விடயம் தொடர்பில் இலஞ்ச ஊழல் ஆணைக்குழுவில் முறையிடுவது என சபையில் தீர்மானிக்கப்பட்டது. இதையடுத்தே சபை இயல்புக்குத் திரும்பியது. (அ-ம-26)

## புதைகுழி...

1990ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் பிற்பகுதியில் இடம்பெற்ற இராணுவ நடவடிக்கைகளின்போது மண்டைதீவு, அல்லைப்பிட்டி, மண்கும்பான், காரைநகர் ஆகிய பகுதிகளைச் சேர்ந்த எண்பதுக்கும் அதிகமான இளைஞர்களும் யுவதிகளும் இராணுவத்தால் கடத்தப்பட்டுக் காணாமல் ஆக்கப்பட்டிருந்தனர்.

அவர்களில் பலர் படுகொலை செய்யப்பட்டு, சடலங்கள் மண்டைதீவு பகுதியில் உள்ள சில கைவிடப்பட்ட கிணறுகளில் வீசப்பட்டு புதைக்கப்பட்டதாகக் கூறப்படுகின்றது. அந்தக் கிணறுகளையே அகழ்ந்து நீதியை நிலைநாட்டுமாறு ஊர்காவற்றுறை பொலிஸாரிடம் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

குறித்த சம்பவத்தில் தனது மகனை பறிகொடுத்த 81 வயதுடைய வயோதிபத் தாய் ஒருவரும், வேலணை பிரதேசசபையின் உறுப்பினர் சுவாமிநாதன் பிரகலாதனும் இணைந்து இந்த முறைப்பாட்டை நேற்றுத் தனித்தனியாக முன்வைத்துள்ளனர்.

கடந்த மாதம் 20ஆம் திகதி இடம்பெற்ற வேலணை பிரதேசசபை அமர்வில், மண்டைதீவு மனிதப் புதைகுழிக் கிணறுகளை அகழுமாறு வலியுறுத்தி ஏகமனதாகத் தீர்மானம் ஒன்று நிறைவேற்றப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (அ-ம-26-66)

## அனுமதி...

கோபுரங்கள் அனுமதி பெறாது நிறுவப்பட்டுள்ளதாக மாநகரசபை அமர்வில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம் மாநகர அமர்வு முதல்வர் திருமதி மதிவதனி விவேகானந்தராஜா தலைமையில் நேற்று இடம்பெற்றது. இதன்போதே, மாநகர எல்லைக்குள் ஏராளமான தொலைத்தொடர்பு கோபுரங்கள் அனுமதியில்லாமல் செயற்படுகின்றன என்று மாநகர பிரதி முதல்வர் இமானுவேல் தயாளனால் குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டது.

இதையடுத்து, பிரதம பொறியியலாளர் ஊடாக சபையின் அடுத்த அமர்வில் முழுமையான கணக்கு விவரங்கள் சமர்ப்பிக்கப்படும். அதைத் தொடர்ந்து மேலதிக நடவடிக்கை எடுக்கப்படும் - என்றார். (அ-ம-20-26)

## தமிழ்ப்...

அதேவேளை, காலி மாவட்டத்தைச் சேர்ந்த அம்பலாங்கொடை ஸ்ரீ தேவானந்தா கல்லூரியின் மாணவன் சந்துனி அமயா 198 மதிப்பெண்களைப் பெற்று தேசிய மட்டத்தில் முதலிடம் பெற்றுள்ளார். இம்முறை புலமைப்பரிசில் பரீட்சையில் 51ஆயிரத்து 969 மாணவர்கள் மாவட்ட மட்ட வெட்டுப் புள்ளிகளுக்கு மேல் பெற்றுள்ளனர். வெட்டுப்புள்ளிகளுக்கு மேல் பெற்ற மாணவர்களின் எண்ணிக்கை கடந்த ஆண்டுடன் ஒப்பிடுகையில், 1.06 வீதம் அதிகம் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ-ச-26-20-66)

## ஒரே இடத்தில்...

என்புத்தொகுதிகள் மீட்கப்படுவதற்கான சாத்தியங்களையே வெளிப்படுத்துகின்றது என துறைசார் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இந்த என்புத்தொகுதிகள் நேற்று அல்லாமல், இதற்கு முன்னர் அடையாளம் காணப்பட்ட என்புத்தொகுதிகளின் துல்லியமான இலக்கமிடல் நடவடிக்கை என்றும் கூறப்பட்டுள்ளது. அத்துடன் தாயத்து, மூன்று சட்டைப்பொத்தான்கள், நாணயங்கள் என்பனவும் அகழ்ந்து எடுக்கப்பட்டு நீதிமன்றக் கட்டுக்காவலில் ஒப்படைக்கப்பட்டுள்ளன. (அ-ம-26)

## 'அம்பர்'...



சுற்றுலாப் படகுச் சேவை நேற்று முதல் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. குறிகாட்டுவான் கடற்பகுதியில் நேற்று ஆரம்பிக்கப்பட்ட இந்தச் சேவையில், வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன், இந்தியத் துணைத்தூதுவர் சாய் முரளி ஆகியோர் கலந்து கொண்டனர். (அ-ம)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கொலைகளுடன் தொடர்பு சந்தேகநபரொருவர் கைது

கொழும்பு,செப்.5

பாதாள உலகக் குழுவின் பல கொலைச் சம்பவங்களுடன் தொடர்புடைய குற்றச்சாட்டில், சந்தேகநபரொருவர் தலவாக்கலை, அக்கரபத்தனையில் நேற்று முன்தினம் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

சந்தேகநபர் மீட்டியாகொடப் பகுதியில் இடம்பெற்ற பல கொலைச் சம்பவங்களுடன் தொடர்புடையவர் என்றும், இந்தோனேசியாவில் கைதுசெய்யப்பட்டு, இலங்கைக்கு நாடு கடத்தப்பட்ட பாதாள உலகத் தலைவர்களுடன் தொடர்புடையவர் என்றும் பொலிஸ் சிறப்புப் பணிக்குழு தெரிவித்துள்ளது.

பாதாள உலகக்குழு நபர்கள் வெளிநாடுகளிலிருந்து, இலங்கையில் உள்ள தனிநபர்களுடன் தொடர்பைப் பேணுவதற்குத் தேவையான வட்ஸ்அப் தொழில்நுட்பத்தை சந்தேகநபர் வழங்கியுள்ளார் என்று தெரியவந்துள்ளது. கைதுசெய்யப்பட்ட பாதாள உலகக்குழுவின் சந்தேகநபர்களின் தொலைபேசித் தரவுப் பகுப்பாய்வின் அடிப்படையில், சந்தேகநபர் கைதுசெய்யப்பட்டுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர். (ச-இ)

# கருத்துரை

யாழ்ப்பாணம், செப்.5

சமூக விஞ்ஞானப் படிப்பு வட்டம் 'மன்னார் காற்றாலைத் திட்டமும் கனிம மணல் அகழ்வும் மக்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகளும்' எனும் தொனிப்பொருளில் நடத்தும் கருத்துரை நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை பி.ப. 4மணிக்கு இல 1134(62) கே.கே.எஸ். வீதி, கொக்குவில் சந்தி கொக்குவிலிலுள்ள தேசிய கலை இலக்கியப் பேரவை கவிஞர் முருகையன் கேட்போர் கூடத்தில் நடைபெறவுள்ளது.

இதன்போது சாந்தன் தொடக்கவுரையையும், சூழல் பொறியியல் நிபுணர் கா.சோ.சிவநேசன் கருத்துரையையும் நிகழ்த்துவர். தொடர்ந்து கருத்துரை முடிவில் கலந்துரையாடல் இடம்பெறும். நிகழ்வில் அனைத்து அறிவியல் சமூக விஞ்ஞான கலை இலக்கிய சமூக ஆர்வலர்களையும் கலந்துகொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (ச-41)

# தேர்த் திருவிழா

யாழ்ப்பாணம், செப்.5

அரியாலை நீரொச்சித்தாழ்வு ஸ்ரீ சித்தி விநாயகர் ஆலய வருடாந்த மஹோற்சவம் கடந்த மாதம் 28ஆம் திகதி முதல் ஆரம்பமாகி நடைபெற்றுவருகிறது. தேர்த்திருவிழா நாளை சனிக்கிழமை காலை 9 மணிக்கு நடைபெறவுள்ளது. மறுநாள் ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்குத் தீர்தோற்சவம் இடம்பெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (25, 17)

# குவைத் எயார்வேஸ் விமானசேவை ஆரம்பம்

குவைத் எயார்வேஸின் கொழும்பு வணிக விமானசேவை எதிர்வரும் ஒக்ரோபர் மாதம் 26ஆம் திகதி முதல் மீண்டும் ஆரம்பிக்கப்படவுள்ளது.

இந்த விமானசேவை ஞாயிறு, புதன், வியாழன் மற்றும் வெள்ளிக்கிழமைகளில் நான்கு விமானங்களை இயக்கவுள்ளது. கொழும்பு நகரத்தை பிரதான சுற்றுலாத் தலமாகக் கொண்டு இந்த வணிக விமான சேவை ஆரம்பிக்கப்படவுள்ளதாக குவைத் எயார்வேஸ் விமான நிறுவனம் தெரிவித்துள்ளது. (ச-இ)

## யாழ்.பிராந்திய கடவுச்சீட்டு அலுவலகத்தின் முதல் அதிகாரியாக பிரணவன்!



குடிவரவு குடியகல்வுத் திணைக்களத்தின் யாழ்ப்பாணப் பிராந்திய அலுவலகத்தின் முதலாவது பிரதிக் கட்டுப்பாட்டு அதிகாரியாக நயினாதீவைச் சேர்ந்த இலங்கை நிர்வாகச் சேவை அதிகாரி நடராஜா பிரணவன் நியமிக்கப்பட்டுள்ளார்.

யாழ்ப்பாணத்தில் குடிவரவு குடியகல்வுத் திணைக்களத்தின் புதிய பிராந்திய அலுவலகம் யாழ்ப்பாண மாவட்டச் செயலக வளாகத்தில் அண்மையில் ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்கவால் திறந்துவைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ச-இ)

# முழுநிலாக் கருத்தரங்கு

யாழ்ப்பாணம், செப்.5

உரும்பிராய் ஞானவைரவ கோவிலடி சனசமூக நிலையம் நடத்தும் முழுநிலா நாள் கருத்தரங்கு நாளைமறுதினம் ஞாயிற்றுக்கிழமை பி.ப. 4.30மணி தொடக்கம் 6மணி வரை சனசமூக நிலைய மண்டபத்தில் இடம்பெறவுள்ளது. சனசமூக நிலையத் தலைவர் இரா.ஜெயக்குமார் தலைமையில் நடைபெறவுள்ள நிகழ்வில் மறவன்புலவு க.சச்சிதானந்தன் 'இன்றைய காலகட்டமும் சைவ ஆலயங்களும்' எனும் பொருளில் கருத்துரை வழங்குவார். (ச-41)



# யாழ். செட்டித்தெரு மெதடிஸ்ட் மிஷன் புலமைப்பரிசில் பெறுபேற்றில் சாதனை

யாழ்ப்பணம்,செப்.5

செட்டித்தெரு மெதடிஸ்ட் மிஷன் தமிழ்க்கலவன் பாடசாலை வெளியாகிய புலமைப்பரிசில் பரீட்சையில் சாதனை படைத்துள்ளது.

குறித்த பாடசாலையில் கல்விகற்கும் 30 மாணவர்கள் புலமைப்பரிசில் பரீட்சைக்குத் தோற்றியிருந்த நிலையில் 10 மாணவர்கள் வெட்டுப்புள்ளிக்கு மேல் பெற்று சாதனை படைத்துள்ளனர். குறித்த பாடசாலை மிகவும் சிறிய பாடசாலையாகக் காணப்படும் நிலையில் இந்தச்சாதனையை நிகழ்த்தியுள்ளது. (ச-27)

**வீட்டுப் பணிப்பெண்கள் தேவை**
நீர்வேலியில் வீட்டுப்பணிப்பெண்கள் தேவை. அனுபவம் உள்ளவர்கள் விரும்பத்தக்கது.
074 292 5923
(CS/59315) J-1

**தென்னங்காணி விற்பனைக்கு**
எழுது மட்டுவாளில் 3 ஏக்கர் காணி விற்பனைக்கு உண்டு. குருநகரில் 5 பரப்பு காணி விற்பனைக்கு உண்டு.
தொடர்பு:- 077 711 4361
(CS/59267) J-1

**காணி தேவை**
யாழ் மாநகர சபை எல்லைக்கு உட்பட்ட பகுதியில் வியாபார நோக்கத்திற்காக 3 தொடக்கம் 5 பரப்புக்கு இடைப்பட்ட காணித்துண்டு தேவை.
தொடர்பு:- 077 744 4407

**சிறுநீரகம் தேவை**
கிளிநொச்சியில் சிறுநீரக நோயினால் பாதிக்கப்பட்ட ஒருவருக்கு அவசரமாக O+ இரத்த சிறுநீரகம் தேவை
வயதெல்லை : 18 - 50
தொடர்பு: 077 204 9788
(CS 45994) E

**மணமகன் தேவை**
சுவிற்சர்லாந்தில் பிறந்து வங்கியில் பணிபுரியும் 2000 ஆண்டு பிறந்த விசாக நட்சத்திர (உயர்குலம்) மணமகளிற்கு மணமகன் தேவை
சுவிற்சர்லாந்து அல்லது ஐரோப்பா, கனடா, அவுஸ்ரேலியாவில் வசிப்பவர்கள் மட்டும்
WhatsApp குறுந்தகவல் ஊடாக மட்டும் தொடர்புகொள்வதுடன் மணமகனின் குறிப்பு விபரங்களை அனுப்பிவைக்குமாறு தயவுடன் கேட்டுக்கொள்கிறோம்.
WhatsApp இலக்கம்
+41 76 813 37 65
(CS 59259) E

**கிரியைகள் செய்து தரப்படும்**
கீரிமலை அந்தியேட்டி மடத்தில் அந்தியேட்டிக் கிரியைகள் மற்றும் சாந்திகள், சபிண்டீகரண கிரியைகள் செய்து தரப்படும்.
நகுல உமா குருக்கள் (கீரிமலை ஐயா)
தொடர்பு:- 077 049 8438
(CS/59267) J-1






Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 05.09.2025 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.